Registered No. M. 878.

பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதாரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 1. } 1910௵ டிசம்பர்௴ 15௳. சாதாரண௵ மார்கழி௴ 1௳. { பகுதி 8.

ப. நாராயண அய்யர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ௹ 2. — தனிப்பிரதி அணா 4.

மதுரை
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.

		பக்கம்.
தீயகுணமுள்ளகுழந்தையை நல்ல குணமுள்ளவனாக மாற்றுமுறை	சிவராமசுப்பிரமணியன்-	உசங
மதங்களுக்குள் சகோதர தர்மம் நிகழவேண்டுமென்பது	ப நா. அன்னிபெஸண்டு-	உ.சஎ
அலெக்ஸாண்டர்சக்கரவர்த்தியும் ஒரு பிராஹ்மனோத்தமரும்	ஆத்மநாதன்	உடுஉ.
மகாலயபக்ஷமும்நவராத்திரியும்--பி, எஸ். சுப்பிரமணியஐயர்-		உடுகூ
சநாதனதர்மம்என்றால்என்ன—டி. எஸ். தியாகராஜஞானியார்-		கசுகூ
நேரிசை ஆசிரியப்பா—சே. ரா திம்மப்பையர்.		உஎங
பத்திரிகைகள் வரவு—பத்திராதிபர்.		உஎச
புத்தகவரவு—பத்திராதிபர்.		உஎடு
சமாசாரம்—பத்திராதிபர்.		உஎஎ

THE

ORIENTAL PROGNOSTIC OBSERVATORY.

Corresponding Director: **V. V. Ramanan.**

F. Z. S. (LOND.) O.M.D.S.F.V. (BERLIN).

M.O.S.M.F (PARIS): ETC.

Charges very moderate for the work turned out!

We do not for a moment deny that there are plenty of imposters who in the name of astrology are making false predictions and thus bringing a noble science into ill-deserved contempt. But our predictions are guaranteed and based on the most reliable canons of all the systems Asiatic and European. Struck by our abilities in interpreting planetary influence, that NESTOR of "MODERN ASTROLOGY" in the West, Mr. ALAN LEO writes to us "Just give us the cream of your system and MAKE YOUR NAME FAMOUS IN THE WEST."

Apply with birth-date, and an initial fee of Rs. 6 stating requirements to the undersigned:—

1, SAMI PILLAI ST., Chulai, Madras, N.C. — **V. V. Ramanan,** Corresponding Director.

277

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 1. } 1910௵ டிசம்பர்௴ 15உ. சாதாரண௵ மார்கழி௴ 1உ. { பகுதி 8.

* தீயகுணமுள்ள குழந்தையை நல்ல குணமுள்ளவனாக மாற்றும் முறை.

தண்டனையின் நீதியைப்பற்றி இருவித அபிப்பிராயங்கள் உள்ளன. ஒருவகையார் கொள்கை என்னவென்றால்;

1. குற்றவாளியைத் தண்டித்தல், பழிக்குப் பழிவாங்கும் தர்மத்தைப்பற்றியது.

2. தண்டித்தால்; குறித்த குற்றவாளி இனிக்குற்றம்செய்யாமல் இருப்பான்.

3. பிறர் குற்றஞ் செய்யாமல் இருக்கும்படி தடுத்தலாம்.

4. குற்றவாளி இனிக்குற்றம் செய்ய ஏதுவான சகவாசத்தையும், சமயத்தையும் குறைத்தலாம்.

5. குற்றவாளியை நல்வழிப் படுத்தலாம்.

---

* நிஹால்சிங்கு என்றபுத்திமான் நம்தேசத்தில் பஞ்சாபைச்சேர்ந்தவர். பலதேசங்களில் அறிவுடனே யாத்திரை செய்தவர். தீயகுணமுள்ள குழந்தைகளை நற்குணமுள்ளவர்களாக, மாற்றும் முறையென்பதைப்பற்றி வெகு விஸ்தாரமாக ஒரு புஸ்தகம் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

மற்றொருவகையார் கொள்கை, குற்றவாளியை, சாம, பேத, தானத்தால், நல்லவனாகச்செய்ய முயலவேண்டும். ஒவ்வொருவனிடமும், உயர் நலம் சிறுபான்மையாகவாவது குப்தமாக இருந்துள்ளது. கோபத்தினாலும், கொடுமையான தண்டத்தாலும், சிறுபொறியாய் அமைந்துள்ள நன்னலத்தை அணைத்துப்போய்க்கும்படி செய்யாது, சிறுகச்சிறுக, நன்மையான உபாயத்தால், குப்தமாயுள்ள நலம் மலரும்படியாகச்செய்யவேண்டும். இப்படிச்செய்துவருவோமாகில், நாளடைவில், முதலில் குற்றம் செய்த வாலிபனின், அக்குற்றம் செய்யும்சிந்தனைகுறைவுபடும். இந்தக் கொள்கையானது இப்போது மேல்நாட்டில்; முக்கியமாக அமெரிக்காவில் ஐக்கமாகாணத்தில் சில இடங்களில் நடைபெறுகிறது. வாலிபர்களுக்கென்று ஒரு நியாயஸ்தலம் ஏற்பட்டிருக்கிறது. வாலிபர்கள், குற்றம்செய்தால், அவர்களை விலங்கு போட்டு வழக்கமான நியாயஸ்தலங்களுக்குக் கொண்டு போய் சாக்ஷிவிசாரணை செய்து, தண்டனைகளுக்கு உட்படுத்துகிறதில்லை. ஆனால் அவர்களை இந்த வாலிபர்களுக்கென்று ஏற்பட்டுள்ள நியாயஸ்தலத்துக்குக்கொண்டுபோய், அவர்களுடைய வாய்ப்பிறப்பினால், குற்றவாளியெனத் தெரிந்தும், அவர்களைச் சீர்ப்படுத்தவும், நேர்மைப்படுத்தவும், அவர்களுடைய தீயகுணங்களை மாற்றி நற்குணமுள்ள சிலர்களாகச் செய்யவும், ஏற்பட்டுள்ள, தொழில்கற்கும் சாலைக்கும் (Industrial Schools) இன்னும் மற்றைய கல்விச்சாலைகளுக்கும் அனுப்பப்படுவார்கள். அல்லது, தகுந்த மனிதர்களின் ஜாமீன்பேரில், நல்நடத்தை அப்பியசிக்கும்படியான கிரகங்களுக்கு அனுப்பப்படுவார்கள். இந்தவாலிபர்களின் நியாயஸ்தலத்தின் அதிபதி சாதாரணநியாயஸ்தலங்களின் அதிபதிபோன்று இராமல், இரக்கமுள்ளவராகவும் வாலிபன் குற்றவாளி அதனால் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்ற சாதாரண சட்டதிட்டங்களின் தர்மமுறையை அதிக முக்கியமெனக் கருதாமல், அவ்வாலிபன் எவ்விதம்நல்ல குண சீலனாக ஆவானோ அதற்கு ஏற்ற பழக்கங்களை அப்பியசிக்க வேண்டுமென்ற கருத்துள்ளவர். வாலிபத்திற் செய்யும் குற்றம், பெற்றோரின்பால் ஏற்றப்படவேண்டும். ஏனெனில், அவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்குச் சரியானபடி, படிப்பும் பழக்கமும் ஏற்படுத்தாத தோஷத்தாலன்றோ? குழந்தைகள், நல்வழிதவறி

தீயவைசெய்ய ஹேதுவாகின்றார்கள். எவ்வளவு தீயகுணமுள்ள வாலிபனாக இருந்தாலும் சரி, கல்விகேள்விகளாலும், சத்சங்கத்தாலும், அவனை நல்வழிப்படுத்தல் கூடுமென, (Luther Burbank) லுதர் பர்பான்கு என்பார் சொல்லுகிறார். அவரோ வராகமீரர் பிரஹத்ஸம்ஹிதையில் சொல்லிய பிரகாரம், ஒஷதி சாஸ்திரத்தில் விதவிதமான அற்புதங்களைச் சிருஷ்டித்திருக்கின்றார். முள்ளுள்ளசெடிகளை, சில உபாயத்தால், முள்ளில்லாமலும், கசப்புள்ள பழங்களை உண்டாக்கும் செடிகளை தித்திப்புள்ளபழங்களைக் கொடுக்கும் இயல்பினவாகவும், செய்திருக்கின்றார்.

அவர் சொல்லுகிறதாவது:—ஒரு குழந்தை ஒரு செடிபோன்றது. வித்தியாசம் என்னவென்றால், செடியில், சொற்ப, விஷயங்களான பற்றுகள் உள்ளன. குழந்தையினிடமோ, ஆயிரக்கணக்கான பலபற்றுகள் உள்ளன. செடிக்கு ஒருஉபாயமான வேலை செய்தால் சிலமாற்றங்களை உண்டாக்கலாம். குழந்தைக்கு, ஒரு உபாயமான வேலைசெய்தால், ஆயிரக்கணக்கான பலமாற்றங்களை, அதன் ஒழுக்கமுறை முதலியவைகளில் செய்தல் கூடும். குழந்தையினிடம், யாதேனும், ஒரு நல்ல சுபாவத்தின் கரு இருப்பதாகத் தோன்றினால், அந்நல்லசுபாவம் விர்த்தியடையுமாறு, அனுகூலமான சௌகரியங்களும், நேர்மையான சுற்றமும் அமைத்தல் வேண்டும். ஒருசெடியில் ஒரு மாற்றம் உண்டுபண்ணவேண்டுமானால், எவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டுமோ, அதில் சொற்ப சிரமம் எடுப்போமானால், பெரியமாற்றத்தைக் குழந்தையின் இடம் உண்டாக்கலாம். குழந்தையை பெருமையும் உயர்நலமும் பெறும்படிசெய்தல் இலகுவான காரியம். பொறுமையும் கோபமின்மையும், நேரான நெறியில் நடத்தும்அறிவும் நமக்கு வேண்டும்.

குழந்தை என்பது தேசத்தின் பெரிய சம்பத்தன்றோ? அது மேன்மையான மனிதனாகக் கூடுமன்றோ? அவனால் உலகத்திற்கே உயர்நலம் உண்டாகுமன்றோ? அக்குழந்தை தீயவழியிற் புகுந்து தீயபழக்கம்பெற்று, மனிதனாக ஆகுமாகில், தேசத்திற்கும் பின்பு உலகத்திற்கும்எத்துணைபாதகங்களைச்செய்யும் இயல்பினனாக ஆவானென்று கருதுக. இளம்பிராயத்தில், குழந்தைகளை, கல்விப்பயிற்சி

யாலும், கைத்தொழில் கற்பிப்பதாலும், அவர்களை நல்வழிப்படுத்தல், இராஜாங்கத்தின் முதற்கடமையாகும். இராஜாங்கத்தார் அப்படிச் செய்யாவிடில், ஊராரில் சிலபுத்திமான்கள் சேர்ந்து, உரிய பாடசாலைகளையும், தொழில்கற்கும் சாலைகளையும் நிறுவித்தல்வேண்டும். தனவான்கள் இதற்கு திரவிய சகாயம் செய்யவேண்டும். இத்தகைய சகாயமே செல்வத்திற்கழகு.

மேனாடுகளில் இப்போதுதான், குழந்தைகளை நடத்தும் முறையில், ராஜாங்கத்தாருக்கும் பொதுஜன சமூகத்திற்கும் உத்தரவாதங்கள் உள்ளன, என்று அபிப்பிராயம் ஏற்பட்டுவருகிறது. இத்தன்மையான அபிப்பிராயம் நம்தேசத்தில் இன்னும் உதயமாகவில்லை. ஆதிகாலத்தில் இருந்திருக்கலாமென புத்தகங்கள் மூலமாக அறிகிறோம், அது ஏட்டுச் சுரைக்காயாக இருக்கின்றது போலும். இப்போது அது அனுஷ்டானத்தில் இல்லை. நம்மவர், நம்முடைய குழந்தைகளின் க்ஷேமத்தைப்பற்றி, உண்மையான உத்தரவாதத்தை நினைந்து, அவர்கள் நன்மக்கள் ஆகும் முறைப்பாடுகளை, எப்போது நிலை நிறுத்துவார்களோ நாம் அறியேம்.

சிவராமசுப்பிரமணியன்.

நன்மொழி.

36. நித்திரை கொள்ளுமுன், அன்று, நீ செய்த கர்மங்களையும் கொண்ட சிந்தனைகளையும் ஒன்றின்பின் ஒன்றாய் பின்நோக்கிச்சென்று சோதித்துப்பார். சுயநயம் பாராட்டியது எது, பிறர் நயம்பயந்தது எது, என ஆராய்ந்து பார். சுயநயம் பாராட்டியது உன்னைப் பந்தப்படுத்தும் எனவும், பிறர்நலம் உள்ளது உன்னை நலப்படுத்தும் எனவும் அறிந்துகொள். சோதனையை நாள்தோறும் தவறாமல் நடத்துவாயாகில், அது உன்னை உயர்த்தும். நீ உயர்நலம்பெறுவாய்.

37. தீயது சிறிதென்று அலக்ஷியம் செய்யாதே. சிறிது பெரியதில் அழுத்திவிடும். பாம்புக்குட்டியே என்று எடுத்து, முத்தமிடார். அதனால் தீயது சிறிதெனினும் அகற்று.

மதங்களுக்குள் சகோதர தர்மம் நிகழவேண்டுமென்பது.

(முன் 218-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

கடவுள் ஒருவர் உளர்.

---

1. எல்லாச்சமயத்திலும் முக்கியமான தத்துவம் இதுவே. எல்லா நீதிமுறைகளுக்கும் ஸ்திரமான அஸ்திவாரம் இதுவே. "ஒன்றே உள்ளது இரண்டல்ல." இவ்விதம் 1 ஹிந்துசமயம் முறையிடுகிறது. "இஸ்ரேயலில் உள்ள ஜனங்களே! நம்முடைய கடவுளாகிய பிரபு, ஒரே பிரபு உள்ளார்" என்று 2 ஹீப்ரு (யூதர்) ஜாதியார் சொல்லுகிறார்கள். "ஒரே கடவுள் உள்ளார் வேறு கடவுள் இலர்" என்கிறார் கிறிஸ்துவர் "கடவுளைத்தவிர வேறே கடவுள் இல்லை" என்பார் மகம்மதியர். ஏனையமதங்களும் இந்த அபிப்பிராயத்தையே திருப்பிச்சொல்லுகின்றன. நாகரீகமில்லாத காட்டுமனிதர்களும் கூட அவர்கள் ஆராதனைசெய்கிற நானாவிதமான விக்கிரகங்களுக்குப் புறம்பாய் அன்னியமாய் ஒருபெரிய அசரீரியான ஆத்மா, சக்தி, அல்லது சைதந்நியம் இருப்பதாகவே கருதுகிறார்கள். அதற்கு, அவர்கள் கொடுத்திருக்கிற பெயரானது "சர்வவியாபியாக எங்குமுள்ளவரென" பொருள்படும். அவர் சுயம்பு, தானாகத்தனிமுதலாய் உள்ளவர். அநந்தர், என்றும் உள்ளவர். அவர் எல்லாப்பிராணிகளுக்கும் ஆதாரமான ஓர் உயிர். எல்லா ஜீவராசிகளும் அவர் ஆதாரத்தினால் ஜீவிக்கின்றன. உள்ளன எல்லாம் அவரில் உறைவிடம் பெறுகின்றன. அவரிடம் ஜீவிக்கின்றோம், அவரால் இயங்குகின்றோம், அவரால் உயிருடன் இருக்கின்றோம். 3 அவரை ஒரு சமுத்திரத்திற்கு உவமித்தல் உண்டு. அதன் துரை நானாவிதமான உருவங்கள் உடையது. அவரை அக்கினிக்கு உவமித்தல் உண்டு. அதனின்று கோடானுகோடி நெருப்புப்பொறிகள் உண்டாகும். ஒவ்வொரு பொறியும் ஓர் ஓர் ஜீவாத்மாவாம். அவரை ஒரு விருக்ஷத்திற்கு உவமித்தல் உண்டு. அதில் எண்ணிறந்த இலைகள் உள்ளன. ஒவ்வொரு இலையும் ஓர்ஓர் உயிராம். அவர் விண்ணிறந்து

---

1. Chando Upanishad. VI. ii 1.
2. Deut- VI. 4. (Cor VIII 4.) (Aluarau viii)
3. Acts. 17. 28.

மிக்கார். அவர் ஆகாசத்தைவிட விசாலமானவர். எண்ணிறந்த நக்ஷத்திரகோடிகள் அவர் ஆகாரத்தின் மேல் இயங்குகின்றன. ஒவ்வொரு நக்ஷத்திரமும் ஓர் ஓர் சூரியசம்பிரதாயமாம். (Solar System) அணுவுக்குள் அதன் உயிராய் அவர் இருக்கின்றமையால், அவர் அணுவுக்கும் நுண்ணியர். 4. அவர் பரவி எட்டாத பெரிதானது வேறு ஒன்றுமில்லை. அவர் எட்டாத நுண்ணியதும் மற்றொன்றுமில்லை. அவர் சிறியவாகப்பெரியோர். தாம் ஓர் உருவம், ஓர் வர்ணம், ஓர் ஆகிருதி ஒன்றும் இல்லாதார். 5. ஆயினும் எல்லா உருவங்களும், அவரிடமிருந்து அழகைப் பெறுகின்றன. எல்லா வர்ணங்களும், அவருடைய வெண்மையான ஜோதியின் ஓர் ஓர் அம்சமாம் எல்லா ஆகிருதிகளும் அவர் சித்தத்தின் வெளித்தோற்றங்களாம். புராதன மலைத்தொடர்கள் அவருடைய பலத்தைக்காட்டும். ஓய்வில்லாத திரைகடல், அவருடைய ஓய்வில்லாத சலனத்தை விளக்கும். பழைமையான காடுகளில் அதிக அடர்ந்த இடம் மதியத்தில் ஓய்வு ஒழிவடைந்து நிசப்தமாக இருத்தல் அவருடைய சாந்த நிலையாம். நீரோட்டம், ஓடை, கீ ம்பாடும் பறவை, காற்றால் அசையும் மரக்கிளைகள், இவையெல்லாம் அவர் குரலின் பலஸ்வரங்களாம். இடுப்புவரை அடர்ந்து உயர்ந்த வாசனைப்புற்களின் மேய்கின்ற கொழுப்பான மான், மரை, பசு, காளை, ஆடு, மாடுகள், புஷ்பங்கள் சொரிந்துள்ள பசும்புல்நிலங்கள், பனிக்கட்டி உறைந்த மேடுகள், சூரியன், அக்கினி, சோலையின் குளிர்ந்தநிழல், அவர் வனப்பின் பலகாட்சிகளாம். பாடகரின் உயர்நலம் அவரே. கம்பீரமான வசனநடையில் வசனிக்கின்றவர் அவரே. கானரசங்கள் தோய்ந்த நாதகீதங்களையும், நானாவிதமான நாதங்களுள் ஒத்திசைந்த இனிய கானங்களையும், பாடுகின்றவர் அவரே. உயர்பக்தனின் ஆதியும் அந்தமும் அவரே. சாகத்துணிந்த திரனின் தீரத்தன்மை அவரே. தன் குழந்தைமேல் குனிந்து குலாவுகின்ற தாயின் குசுகுசுப்புமான பேச்சும் அவரே. பாலரின்கண் படபடவென்று அடிக்கும் இரத்தநாடியின் நாட்டமும் அவரே. கன்னிகையின் கூச்சமா

---

4. மாணிக்கவாசகர், அப்பர், நம்மாழ்வார் பாசுரங்களைப்பார்க்க.

5. ஆதிகிரந்தசாயப் ஸோராத் 1.

ணைகடைக்கண் பார்வையும், புன்னகையும் அவரே. வருந்துகின்ற புண்களுக்கு ஆறுதல்செய்யும் கையும் அவரே. அவரே தீர்க்கதர்சியாகத்தோன்றுவார். ஞானியாக வெளிகாட்டுவார், சாஸ்திரியாக வசனிப்பார், மனநொய்மையுள்ளாருக்கு அவர் பலமாவார், அநாதைகளுக்கு ரக்ஷகராவார். பாபிகளின் பச்சாதாபத்தில் மனஉருக்கமாக இருக்கிறார். சத்திய ஒழுக்கமுடையாரிடம் கருணையாக இருக்கிறார். உலகங்களெல்லாம் பரவிஉள்ளார். மனிதனின் ஹிருதயத்தின்கண்உறைவார், விண்உலகங்கள் அவர் மஹிமையை அறிவிக்கின்றன. 6. ஆனால், துன்பப்படுமவருக்கு தாய்போல் இரங்கி, ஆறுதல் செய்கின்றார். 7. அவரிடமிருந்து வெளிவந்திருக்கின்ற ஜீவர்களுக்குத்தந்தையும் அவரே. 8. தாயும் அவரே, கணவரும் அவரே, நண்பரும் அவரே. அவர் பூர்ணர். அவர் இவைகளிலெல்லாம் வியாபித்திருக்கின்றார். 9. பிரபஞ்சங்களை எல்லாம் கடந்தவர். "என்னுடைய ஓர் அம்சத்தால் இந்தப்பிரபஞ்சத்தை ஸ்தாபித்திருக்கிறேன்" 10.

2. கடவுள் ஒருவர் உளர்—என்பது சமயமுறைக்கும், நீதிமுறைக்கும் முக்கியமான ஆதாரமாக இருக்கிறதும் தவிர, இவ்விதம் இருப்பதை உணர்தல் உலக வாழ்க்கைக்குப்பலத்தையும் நலத்தையும் உண்டுபண்ணுகிறது. இறைவனானநித்தியம் என்ற அகண்ட காலத்தில், மனிதன் ஓர் உயிர்; அவர் அம்சத்தில் சம்பந்தமுள்ளவன்: மரணமற்றவன், நித்தியன். இறைவன் என்று இருக்கின்ற ஒரு உயிரே,நானாவிதமான எண்ணிறைந்த உருவங்களாகத்தோன்றுகிறார். ஏகனே அனேகங்களாக ஆகின்றார். அவருடையசம்பந்தத்தால், எல்லாஜீவராசிகளும் ஒன்றே என மதிக்கற்பாலன. அதனால் நாம்நம்முடைய பிதாவின் கிரகத்தில் என்றும் குழந்தைகள். அதனால் நாம் சகோதரர்கள் ஆவோம். எவ்வுயிரினிடமும் பாராபரனைக் காண்கின்றோம். எல்லாம், உயர்நலம் அமைந்த ஒரே லக்ஷியத்தை நோக்கியே செல்லுகின்றன, என்பதை நாம் உணர்கின்றோம். நாம் கடவுளின் ஓர் ஓர் அம்சர்களாக இருக்கின்றமையால், நாம்

6. Psalms 19 (1) 7. Isaiah 6 (13)
8. அப்பர் தேவாரம் பார்க்க.
9. ஸ்வேதாஸ்வதரோபனிஷத். 3 (9)
10. பகவத்கீதை 10 (42)

குறைவுள்ளார், பூர்ணரல்லர். நமக்குள் பிரத்தியேகமான குறைவுகள் நமக்குள் அன்னியோன்னிய பின்மையை உண்டுபண்ணுகின்றன. ஆயினும், பூரணம்பெறவே, மேன்மேலும் விர்த்தி அடைந்துகொண்டு வளர்கின்றோம். இதனால் அன்றோ, கிறிஸ்து என்பாரும் அடியில் வருமாறு ஆஞ்ஞாபிக்கின்றார். "விண்ணுலகங்களி லிருக்கின்ற உங்கள் பிதாவான ஈசுவரன் எவ்விதம் பூரணராக இருக்கின்றாரோ அவ்விதம் நீங்களும் பூரணராவீர்கள்." அந்நிலைமை சித்தித்தால் நாம் ஒன்றான நிலைமையைப் பெற்றவராவோம்.

3. மனிதஜீவர்கள், அதற்கு மேலான ஜீவர்கள், அதற்குக் கீழான ஜீவர்கள், என்ற இந்த நானுவிதமான ஆத்மாக்கள் அந்த ஒரே பரமாத்துமாவின் பல அம்சங்களான பகுதிகளாம். அதனால் கடைமுறையில் பூரணம்பெற வேண்டியவர்களே.

"அவைகள் உன்னுடைய சிறு சிறு சுடர்கள் அன்றோ."
நலமே எம்முடைய தவறாத லக்ஷியம்.

தூரமாயினும் தவறாது சம்பவிக்கக்கூடிய அந்தத் தெய்விகமான லக்ஷியத்தை நோக்கியே எல்லாப் பிரபஞ்சமும் செல்லுகின்றன.

பூமியிற் கிடந்தாலும், நரகில் உழன்றாலும், தேவலோகத்தில் வசித்தாலும், எங்கும் வியாபகமாய் எல்லாவற்றையும் சுற்றி இருக்கின்ற, அந்த ஒரே ஈசுவரனின் வரம்பைமீறித் தாண்டமுடியாது. அதனால்தான் என்றும் நாம் சாவதானமாக இருக்கின்றோம். ஷிரிருஞானியாரின் அழகான பாசுரத்தின் கருத்தின்படியாக, "கடவுளே! உம்முடைய ஆத்ம சந்நிதியைவிட்டு யான் எங்ஙனம் போகிறது? உம்மைவிட்டுப்போகும் புகலிடம் எது? பறந்து மேல் நோக்கி ஆகாசம்போனால், அங்கே நீர் இருக்கின்றீர். நரகத்திற் போய்உறங்குவேன் என்றால், அங்கே நான் இருக்கின்றேன், என்கிறீர். உதயகால வொளியின்வழியாகப் பறந்து சமுத்திரங்களின் கடைசி எல்லைகளைத் தாண்டலாமென்றாலோ, அப்படிப் போதலுக்குமே உம்முடைய கைதான் என்னை வழிநடத்த வேண்டுவதாக இருக்கின்றது. உம்முடைய வலதுகை என்னைத் தாங்குகின்றது,"*

* Psalms 139, 7-to-10. முண்டக உபநிஷத் II-2-11.

4. மேலும், நாம் ஈசுவர அம்சர்களாகையால், மாறி மாறிக் கொண்டிருக்கின்ற எண்ணங்கள், ஆசாபாசங்கள் இவைகளைத் தாண்டி இவைகளைவிட்டு ஒழித்து, ஆழ்ந்து கிடக்கின்ற உண்மையான தத்வத்தை ஆராய்ந்து நம்முடைய ஆத்மஸ்வரூபத்தைக் கண்டோமானால், ஈசுவரனைக் காணலாம். நம்முடைய ஆத்மா அவரிடமிருந்து வந்ததன்றோ? அவரையே நிலயமாக உடையதன்றோ? நம்மிடம் என்றும் உள்ளவஸ்து, அதாவது ஆத்மா, தெய்வத்தன்மையது அன்றோ? ஒரு களிமண்கட்டியை அறிந்தால் எல்லாக் களிமண்ணையும் அறிந்ததாகுமென்றும், ஒரு தங்கக்கட்டியை அறிந்தால் எல்லாத்தங்கத்தையும் அறிந்த தாகுமென்றும், ஒரு இருப்புத்துண்டை அறிந்தால் எல்லா இரும்பையும் அறிந்ததாகுமென்றும், ஹிந்துமதசாஸ்திரங்கள்உபதேசிக்கின்றன. அதனால்செய்தவஸ்துக்கள்பல நாமங்கள்பெறினும் அவ்வஸ்துக்களின்காரணம் ஒன்றே என்றும் அறிகிறோம். உண்மையில் ஒருஆத்மாவை அறிந்தோமாகில், பரமாத்துமாவை அறிந்ததாகும் இவ்விதமே, கிறிஸ்து என்பாரும் அடியில் வருமாறு உபதேசித்துள்ளார்— "கடவுளை அறிதல்என்றால், நித்தியமான நிலையைப்பெறுதலாம்" மறுபடியும்அவர் சொல்லுகிறதாவது:—

"இதோபார், தேவராஜ்ஜியம் உன்னுள்ளத்திலேயே இருக்கின்றது."

சுத்தமான வாழ்வும், பற்றறற்ற மனமும், அன்புள்ள ஹிருதயமும், சலனமற்ற மனமும் உள்ளவர்தாம் ஆத்மாவைக்காண்பர். மனமாசற்றவர்தாம் இறைவனைக்காண்பார். பாபகர்மங்களினின்று ஒழிவடையாதவனும், இந்திரியங்களை அடக்காதவனும், சிதறும்சித்தத்தை ஒருமைப்படுத்தாதவனும், மனச்சாந்தமில்லாதவனும், வெறுமையானஞ்ஞானப்பயிற்சியால் மட்டும், இந்த ஆத்மாவை அடையமாட்டான். (கடோபநிஷத் 1. 2. (24)

காமக்குரோதாதிகள் மலினமடைந்து, இந்திரியநிக்கிரகத்தில் முயற்சியுள்ளவனும், சத்தியவானும் எப்போதும் தபஸுள்ளவனும், பக்தியுள்ளவனும், பூர்ணஞானமுள்ளவனும், பிரஹ்மசரியவிரதமுள்ளவனும் ஆத்மாவைப்பார்க்கின்றான். அந்தமாசற்றதபஸ்வியானவன் பார்க்கின்ற ஆத்மா, இந்தச்சரீரத்தின்கண் இதோ இருக்கிறான். சுத்தமான தேஜஸ்ஸ்வரூபி (முண்டகம் III i (5)

பிராசீன குறுகியமார்க்கம் இத்தன்மையது. இம்மார்க்கத்தால்தான், முன் ஆன்செல்ம் என்ற ஞானியார் சொல்லியவாறு. "உண்மையில் எவ்விதம் இருக்கின்றாயோ அவ்விதம் ஆகுவாயாக,"

ப. நா. அன்னிபிஸண்டு.

---

* சாந்தோக்கிய உபநிஷத் VI. 1, 4, 5, 6,)
St. John xvii 3 21.

அலெக்ஸாண்டர் சக்கரவர்த்தியும், ஒரு பிராஹ்மணோத்தமரும்.

வயதிலும் கல்வி கேள்விகளிலும் அறிவிலும் உயர்ந்த தண்டின்என்ற பெயருள்ள பிராஹ்மணசிரேஷ்டர் ஒருவர் இருந்தார். கிரேக் தேசத்தின் அனிசிகிரிடஸ் என்ற ஞானியார் சக்கரவர்த்தி அலெக்ஸாண்டரால் அனுப்பப்பட்டு, இந்தப்பிராஹ்மணரைப்பார்க்க வந்தார். ஸாகரிடிஸ்,பைதகோராஸ், டையஜெனிஸ், என்றஞானிகளின் ஸித்தாந்தங்களை இப்பிராஹ்மணரிடம் தெரிவித்து சம்பாஷணை செய்தார். இந்தஞானிகள் மிகவும் உயர்வானவர்கள்தான். ஆனால், பிரபஞ்சத்தின் இயற்கையான உண்மையைவிட ஜனங்களின் தர்மம், உலகவழக்கம் இவைஉயர்வென இவர்கள் கருதியுள்ளார். அதனால் அவர்கள் எங்களைப்போல பற்றற்று நிர்வாணமாக திகம்பரராக வெளியேறி நடைபெற வெட்கம்கொள்ளுவார். அதுஅவர்கள்பால் ஒருகுற்றம். அனிசிகிடஸ், சக்கரவர்த்தி அலெக்ஸாண்டர் தங்களைப்பார்க்கவிரும்புகின்றார்; ஆகையால் தாங்கள்அவரிடம்போகத்தயை செய்யவேண்டும்என்றார். பிராஹ்மணர்,அவரிடம் எனக்குயாதொரு காரியமும்இல்லை. அனுசிகிரிடஸ், அலக்ஸாண்டர்என்பார் சாதாரண மனிதர் அல்லர். ஈசுவரனின் (Jupiter) புத்திரர். உலகசம்பத்துயாவும் பொருந்தியவர். உலகத்தின் சக்கரவர்த்தி. தாங்கள் அவரைக் காண்பீர்களாகில், தங்களுக்கு அவர் வெகுமானம் பல அளிப்பார். பார்க்கமாட்டீர்களென்றால் தங்களை ஹிம்ஸித்துக்கொன்று விடுவார்.

பிரா:—அவர் ஈசுவரனின் புத்திரன் என நான் நம்பவில்லை, உலகத்தின் எல்லா சம்பத்தும் உள்ளவரென்றீர். அதையும் நம்பவில்லை. அப்படி உளரேல், அவர் ஏன் திருப்தி கொள்ளவில்லை? சாந்தமுண்டாகவில்லை. தமக்கும், உலகத்திற்கும் ஏன் வீண்கவலையையும் துக்கத்தையும் விளைவிக்கின்றார்? அவர் கொடைகளிலோ, எனக்குயாதொரு விருப்பமும் இல்லை. அவைகள் வேண்டுவனவல்ல. அவர்என்னைக் கொன்றுவிடுவார் என்றீர். அதினாலும் பயப்படேன். அவர் என்னைக்கொன்றால் அது நலம்தான். இப்போது வயோதிகமான சிதைந்த உபயோகமில்லாத இச்சரீரத்தைவிட்டு என் உயிரான ஆத்மா நீங்கி, சுதந்தரமான பதவியைப்பெறும்.

கொலையால் எற்படும் இம்மாற்றத்தினால் எனக்கு நலம்தான் உண்டாகும். அதனால் நான் அவரைப்பார்க்கப் பிரியப்படேன்.

அனுசிகிரிடிஸ் இவ்விதம் நடந்த சம்பாஷணையை சக்கரவர்த்தியினிடம் தெரிவித்தார். அவர் கோபங்கொள்ளவில்லை. அப்பிராஹ்மணரின் தைர்யத்தை நனி வியந்து, அவர் சமயக்கொள்கையின் உயர்வை அன்புடன்கேட்டு, ஆச்சரியமடைந்து, தான்நேரில்வந்து பார்ப்பதாகவும், சம்பாஷணையின் உயர்நலத்தைத்தாமே நேரில் அனுபவிக்கவேண்டுவதாகவும், அவருடைய முக்கியசிஷ்ராக வேண்டுமென த்தமக்கு விருப்பமிருப்பதாகவும், மிகவும் உபசாரமாக அப்பிராஹ்மணருக்கு ஒரு நிருபம் எழுதினார். பின்பு தாமும் சில சினேகிதர்களும் சொற்பபரிவாரங்களுடன் அப்பிராஹ்மணர் வஸிக்கும் காட்டில் உள்ள ஆச்சிரமத்துக்குச்சென்றார்கள். அக்காட்டை அணுகவே, குதிரையைவிட்டு இறங்கி பரிவாரங்களை எல்லாம் வெளியே நிறுத்தி, மகுடம் டம்பமான அலங்காரங்களை எல்லாம் கழற்றி வைத்துவிட்டுத், தனிமையாக அந்த வயோதிகரான பிராஹ்மணசிரேஷ்டரிடம் போனார்.

சக்கரவர்த்தி;—தண்டின் நமஸ்காரம். தாங்கள்என்னிடம் வரேன்என்றீர்கள், அதனால் தங்களை நானேபார்க்க வந்துள்ளேன்.

பிரா:—என்னிடம் தாங்கள் வந்தகாரியம் என்னவோ? நாங்கள்வஸிக்கும் கானகத்தில் தாங்கள் கொண்டுபோகும் படியானவை என்ன இருக்கின்றன? ஒன்றுமில்லையே! தங்களுக்குவேண்டுவது,எங்களிடம் இல்லையே! எங்களிடம் உள்ளது தங்களுக்கு வேண்டுவதில்லையே! ஈசுவரனை நாங்கள் போற்றுகின்றோம், ஆராதிக்கின்றோம். ஜனங்கள்மேல் அன்பு பாராட்டுகின்றோம். பெண்ணையும் மண்ணையும் பொன்னையும் வெறுக்கின்றோம். யமனைமதியேம். நீங்களோ என்றால், யமனை அஞ்சுகின்றீர். மண்ணையும், பெண்ணையும், பொன்னையும் பற்றி ஆசையுடையீர். ஜனங்களைப்பகைக்கின்றீர், துன்பப்படுத்துகின்றீர். ஈசுவரனை நிந்திக்கின்றீர். பகைக்கின்றீர்.

சக்கரவர்த்தி:—தாங்கள்சொல்வது சரியே. தங்களுடையஞானமுறையைச் சொற்பமேனும் எமக்குக்கற்பியுங்கள் தங்களுடைய

தெய்வத்தன்மை பொருந்திய சீலத்தையும் அகன்ற அறிவையும்
அதிகமான கேள்வியால் தெரிந்திருக்கின்றேன். ஈசுவர சாக்ஷாத்கா
ரம்பெற்றிருக்கிறீர்கள் எனவும், ஈசுவரனுடன் நேர் நேராக சம்பா
ஷணை செய்யும் திறலுடைய ரெனவும் நான் கேட்டிருக்கிறேன்.
கிரேக்தேசத்தின்கண் உள்ள ஞானிகளைவிட எவ்விதத்தில் தாங்கள்
உயர்வு பெற்றிருக்கிறீர்கள் என்பதையும், மற்றைய ஜனங்களைவிட
எவ்விதம் ஞானத்தில் உயர்தல முள்ளவர் என்பதையும், அறிய
அவாக்கொண்டு இங்குவந்தேன்.

பிரா:—ஈசுவரன் அனுக்கிரகத்தால் நான்கற்ற கேட்டஞானமு
றைகளைத் தங்களுக்குச் சொல்ல எனக்குப்பிரியமே. ஆனல் அவ்வுப
தேசம் தங்குவதற்குத்தங்கள் மனசில் இடமில்லையே. எண்ணிறந்த
விசாலமான விருப்பங்களும், தொலையாப்பொருளாசையும், பூமியை
எல்லாம் கட்டியாள வேண்டுமென்ற தூராசையென்றபேயும், தங்க
ள்மனத்திற் குடிகொண்டிருக்கின்றனவே; சமுத்திரத்தின் மீது தங்
களுடைய ராஜ்ஜியம் நடைபெறவேண்டுமெனக் கருதுகிறீர்; இந்தத்
தேசத்தை வெல்லவேண்டும், அந்தத்தேசத்தை ஆழ்த்தவேண்டும்
என்ற எண்ணங்கள் தங்களிடம் எப்போதும் உறைகின்றனவே.
உலகத்தில் ஜயிக்கவேண்டியதேசங்கள்எல்லாம் நீவிர் சுவாதீனம் பெ
ற்றாலும், இன்னும்ஜயிக்கவேண்டிய தேசங்கள் இல்லையேஎன, வரு
ந்துவீர். உலகமுழுமையும் உம்முடைய ஆளுகைக்குள்வந்தாலும்,
திர்ப்திகொள்ளாத உம்முடைய மனசுக்கு, யான்என்ன சாந்தத்தைக்
கொடுக்கஇயலும்? நீர் மற்றமனிதரைப்போல் சிருஷ்டிக்கப்பட்டி
ருக்கிறீர் ஆயினும், பிறர் பொருளைப்பலாத்காரமாக கவர நீர்முயலு
கின்றீர். கடைமுறையில் உமக்கு வேண்டுவதெல்லாம் நான்படுத்திரு
க்கும் இடத்தின் அளவுள்ள நிலம், அல்லது நீர் இருக்கின்ற இட
த்தின் அளவுள்ளநிலம்தானே! என்ஜீவனத்திற்கு வேண்டும் காற்
று, ஜலம், பூமி இடம் இவைகளைமாத்திரம் அடைந்து நான்திருப்தி
கொள்ளுகின்றேன். அதனல் நான் அனுபவிக்கும் அவைகளை நியாய
மாக நான் பெற்றேன். பிறருக்கு எவ்வித தீமையையும் கொடுமை
யும் செய்தேன் அல்லன். உலகத்தில் உள்ள நதிகள் எல்லாம் உம்மு
டையன என்று வைத்துக்கொண்டாலும், நீர் குடிக்கும் ஜலம், என்

னைப்போல்தானே? அதிகமன்றே? என்னிடமிருந்து நீர்ஞானம்பெற வேண்டுமானால், உமக்குவேண்டுவது ஒன்றுமில்லை. தன்னிடமிருக்கின்றவைகளைப் போதுமென்று நினைக்கிறவனுக்கு வேண்டுதல் என்ற ஆசையேது? வறுமைக்குக் காரணம், அதாவது இல்லையே என்று மனம் நோதலுக்குக் காரணம் ஆசையாம். "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே—நல்குரவு அவா எனப்படுமே". வறுமை என்ற வியாதியை நீக்க, இன்ன மருந்து என்று அறியவேண்டும். எல்லாவற்றையும் உரிமைப்படுத்த முயலுகிறவன் திர்ப்தியடையான். அதனெல்லையும் காணமாட்டான். இருக்கிறதைக் கொண்டு மனச்சந்துஷ்டி பெறுமல், இனிவேண்டும் வேண்டுமென அலைகிறவன் எப்போதும் வருந்துவான். வீண்கவலை கொள்ளுவான். உலகத்தின் எல்லாச்சம்பத்துகளையும் நீர் அடைந்தாலும், நான் அனுபவிக்கும் சுகமும் ஆனந்தமும் உமக்கு உண்டாகமாட்டாது. என்னைப்போல் ஜீவிக்கவேண்டும். அப்போதுதான் நான் உபதேசம்செய்யும் ஞானத்தை ருசிப்பீர். ஆகாயம் எனக்கு மேற்கட்டி விதானம்! பூமி என் சுகமான படுக்கை! நதி ஜலம் என்பானம், அடுத்திருக்கின்ற வயல்களின் தானியம் என் உணவு. சிம்மம் போன்று உயிர்ப்பிராணிகளை நான் உண்ணுகிறதில்லை.

இறந்த பிராணிகளின் இரச்சை என்னுட்புகாது. என்சரீரம்ஜீவர்களுக்கு சவக்குழியன்று. என்தாயாரிடமிருந்து பால் குடித்தமைபோல், விருக்ஷங்களின் பழங்கள் எனக்குச்சாப்பாடு. பிறரைவிட நான் எவ்விதமாக வேறுபட்டிருக்கிறேன் என, தாம்தெரிய விரும்புகின்றீர். சுபாவமாக இருக்கின்றேன். தாயின் கருப்பையினின்று எப்படிவந்தேனே அப்படியே இருக்கிறேன். யாதொரு பிரகிருதிப் பொருளும் கொண்டுவந்தேன் அல்லன். யாதொருகவலையும் கொண்டேன் அல்லன், பிறப்பில் இருந்தபடி சுகமாக இருக்கிறேன். இறைவனின் பூர்ணஞானத்தை நம்பி, அவர் எல்லாவற்றையும் நடத்துவார் என்ற பூர்ண எண்ணமுள்ளவனாகஇருக்கிறேன். எனக்கு வேண்டுவன எல்லாம் கொடுப்பார். இனிவரப்போகும் விஷயங்களை யான் அறிவேன். அவை இவ்விதம் நிகழுமென முன்னமே நான் தெரிவேன். அப்படித்தெரியாததினால் இன்னவை சம்பவிக்கும் என்

பதைப்பற்றி அன்னியரிடம் ஜோஸ்யம் கேட்பீர். ஈசுவரன் ஒவ்வொருநிமிஷம் நிகழப்போகும் காரியங்களைப்பற்றி சூசனைகளைக்காட்டியும்நீர் அறியமாட்டீர்!

இவ்விதம் பிராஹ்மணஉத்தமர் சொன்னவார்த்தைகளை அலெக்ஸாண்டர் பொறுமையாக யாதொருகோபமின்றிக் கேட்டு இவ்விதம் உரைக்கலாயினர்.

அலெக்ஸாண்டர்:—தாங்கள் சொன்னவார்த்தைகளின் உண்மையை நான் நன்கு உணர்ந்தேன். சிரேஷ்டமான குலத்தில் நீங்கள் அவதரித்திருக்கிறீர்கள். காலம் முழுமையும் சர்வ சுதந்தரமாக அனுபவிக்கிறீர்கள். சாந்தம்நிறைந்த உறைவிடம் இது. எல்லாச்சுகிர்தங்களையும் சந்தோஷத்துடன் நுகர்கின்றீர்கள். நானோ பெரும்போராட்டம், பயம் இவைகளின் மத்தியில் இருக்கிறேன். என்னைப்பாதுகாக்க ஏற்பட்டுள்ள உத்தியோகஸ்தர்களைக்கண்டும் பயப்படுகிறேன். உண்மையான வெளிப்பகைவர்களைக்கண்டு நான் அவ்வளவு அஞ்சுவேன் அல்லன். என்சினேகிதர்கள் என்ற சமீபத்தில் உள்ளபகைவர்களைக் கண்டு நான் நடுங்குவேன். அவர்கள்யாரேனும் ஒருவஞ்சனைக்கு என்னைஉள்ளாக்குவார்களோ என நான் பயப்படுவேன். என்னைக் காப்பவர்களே, என்சத்துருக்களாவார்களோ எனஎப்போதும் நிராக்கவலையுள்ளவனாகஇருக்கின்றேன். என்பகற்காலமெல்லாம் பிறரைஸம்ஸித்துத், துன்பப்படுத்திவந்தேன். நான் இராக்காலமெல்லாம், என் விரோதிகள் யாரேனும்என்னைத்திடீரென்று கொன்றுவிடுவார்களோ என்றஅவநம்பிக்கையும் பயமும் என்னைத்தொடர்கின்றது. தூக்கமே கிடையாது. யாரைக்கண்டால்பயப்படுகிறேனோ,அவரைநான்கொலைசெய்துவிடுவேன். அதனால் பிறர்என்னைப்பகைக்கின்றார். ஆனால் ஓர் ஓர்சமயம் சாந்தமாகவும் சமாதானமாகவும் இருப்பேன். உலகவாழ்க்கையைத்துறந்து, தங்களுடன் காட்டில் சஞ்சரிக்க என்னால் முடியாது. நான் இருக்கும் இப்பதவியை என்னால் விட ஒண்ணாது. இந்நிலையில் இருக்கும்படி என்னைசிருஷ்டித்தவர் கடவுளே. நான் இந்நிலையைவிட்டுப்பெயராததைப்பற்றி அவர்குற்றமாகக் கொள்ளார். பெரியவரே! உயர்நலம் அமர்ந்த ஞானியே! என்மனப்போக்கைஎல்லாம் நான் தெரிவித்தேன். நீங்கள் நன்றாய் என்னைஅறிந்திருக்கிறீர்கள்.

தங்களுடைய சாந்தம் நிறைந்த மதிநலம்வாய்ந்த உபதேசங்களைக் கேட்டேன். அவைகளால், துயரங்கள் சாந்தம் பெற்றன. சண்டைகளையும் பிணக்குகளையும் தவிர் என்றுசொன்னீர்கள். இத்தன்மையான நன்மொழிகளால் என்மனக்கவலை சற்று ஓய்வை அடைந்தது. நான் சிலபொருள்களைத் தங்களுக்கு நன் கொடையாகக்கொடுக்கின்றேன். பரிபூரண கிருபைசெய்து அங்கீகரித்து அருளவேண்டும். அவைகளைத்தவிர்க்கக்கூடாது. இதுதான் பணிந்தபிரார்த்தனை.

மேற்கண்டமொழிகளை வசனிக்கும் சமயத்தில் அலெக்ஸாண்டரின் பரிவாரங்கள், பலவிதமான, அற்புதமான வெள்ளி சுவர்ண பாத்திரங்களில், பலவாசனை எண்ணெய்களையும்,விசித்திரமானஉணவுகளையும் கொணர்ந்து அப்பிராஹ்மணஉத்தமர் முன் பரத்திவைத்தார்கள். இவைகளையெல்லாம் அப்பிராஹ்மணர் பார்த்தார். புன்னகைகொண்டார். இவ்விதம் கூறுவாராயினர்.

பிரா:—இக்காடுகளில் உள்ள பக்ஷிகளை, இக்கொடைகளினால், முன்னரைவிட அதிக நயமாகப் பாடும்படி செய்ய யாராலும் இயலுமோ? அதுசாத்தியம் அல்ல என்று நினைப்பீரேயாகில், அவைகளைவிட யான் தாழ்ந்தவன் என நினைக்க எப்படித்துணிந்தீர்?

நான் உணவாகவும் பானமாகவும் உட்கொள்ளாதவைகளை நான் அங்கிகரிப்பது எங்ஙனம்? எனக்குவேண்டாதவைகளை நான் ஏற்றல் எவ்விதம்? எனக்குச் சுகிர்தம்பயக்காதவைகளை நான் பெற்றுகாத்தல் எவ்வண்ணம்? அவைகளால் எனக்கு என்பயன்? சுவேச்சையாக சுதந்தர முள்ளவனாக இக்காட்டில் திரியும் என்னை, கவலை என்ற விலங்கில் மாட்டவா இந்தத்திரவியங்களைக் கொடுக்கிறீர்? இக்காட்டில் சிலாமணியாகாத இப்பொருள்களை நான் ஏற்கேன். வேண்டியபழங்களைக்கடவுள் எனக்கு எங்கேபார்த்தாலும் உண்டுபண்ணியிருக்கிறார். பிரியப்பட்டால், பறித்து உண்பேன். பொன்னுக்காக கடவுள்யாதொரு பொருளையும் விற்கிறார் இல்லை. தருந்தவர்களுக்கு ஞானத்தை அளிக்கிறார். எந்த ஆடையுடன் தாய்வயிற்றினின்று வெளிவந்தேனோ அவ்வாடையே எனக்குப் போதுமானது. நான் திகம்பரன்.

தங்குதடையின்றி, காற்றை உட்கொள்ளுகிறேன். பசியுடன் உண்ணுதலும், தாகமிருந்து பானம்செய்தலும், தேனைவிடஅதிக ருசிகரமானவை. இயற்கையாக இப்பக்ஷணங்கள் ருசியாகஇருக்குமாகில், அக்கினியில்வைத்து பக்குவம் செய்வானேன்? உயிர்ப்பிராணிகளை எவ்விதம்தவிர்ப்பேனே, அவ்விதமே அக்கினியில் வைத்த ஒன்றையும்உண்ணேன். ஜீவராசிகளின் மாமிசத்தைஉண்ணுதல் என்றால், முன்னர் அவைகள் உண்டு ஜீர்ணித்ததைத்தான்பின்பு நாம் உண்ண வேண்டுமல்லவா? பக்ஷணங்களைக் கொண்டுபோகுக. தாங்கள் கொடுத்தவைகளைத் தவிர்த்தேன் என்றல்லாமல், தாங்கொணர்ந்த எண்ணெய்களை அங்கீகரிப்பேன்.

பிராஹ்மணர் எழுந்து காட்டுக்குட்சென்றார், உலர்ந்தசமித்துக்களைக்கொண்டுவந்து, அவ்விடம்குவித்தார். அக்கினியை வளர்த்தார். கொணர்ந்த எண்ணெய்களை, ஈசுவரனைத்தோத்திரம்செய்து கொண்டே, அக்கினியில் ஆகுதிசெய்தார். பிராமணர்களுக்குளெல்லாம்நிறைந்திருக்கின்றது. குறைவு ஒன்றும் இல்லை. நினைத்தவை எல்லாம்அவர்களுக்குக்கிட்டும். அவர்கள் ஆப்தகாமிகள்? அன்றோ !!

அலெக்ஸாண்டர் சற்றுநேரம் நின்று, நமஸ்கரித்து பின்பு தம்மிருப்பிடம் சென்றார்.

குறிப்பு:—ராய் சரத்து சந்திரதாஸ் பகதூர் வங்கபாஷையில் செய்த உபந்நியாசம்: ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, பிரபுத்தபாரதா என்ற பத்திரிகையில் வெளிவந்தது- தமிழில்மொழிபெயர்க்கப் பட்டது.

ஆத்மநாதன்.

நன்மொழி

38. உயர் நலம் பெற வேண்டின் அடிக்கடி ஏகாந்தத்தை நாடு. இனிது இனிது ஏகாந்தம் இனிது. ஏகாந்தத்தில் யாதேனும் ஓர் உயர் சிந்தனை கொள்ளு. அதனால் மனம் மலரும், விரியும், பூர்வ நல்லசிந்தனைகளின் வாசனைகள் எற்கும். ஜீவனுக்குள்ளே சிவ மணம் பூக்கும் என்ற ஆன்றோர் அரிய அனுப வார்த்தையை உன்னிப்பார்.

மகாலயபட்சமும் நவராத்திரியும்.

நமது நாட்டில் ஒவ்வொரு வருஷமும் புரட்டாசிமாசத்தில் மகாலயபக்ஷமென்று பதினைந்துநாள் பிதுர்தேவதைகளுடைய ஆராதனைக்குரிய விசேஷதினங்களெனவும், ஒன்பதுநாள் நவராத்திரியென்று சகலதேவதைகளினுடைய ஆராதனைக்குரிய விசேஷதினங்களெனவும் கொண்டாடப்படுவதை நாம் அறிந்திருக்கின்றோம். மகாலயபக்ஷமென்றால் என்ன? அப்பொழுது பிதுர்தேவதைகளை ஆராதிப்பதற்கு என்னகாரணம்? அம்முறையே நவராத்திரி என்றால் என்ன? மற்ற தினங்களைக்காட்டிலும் அந்த ஒன்பதுதினங்களில் சகலதேவதைகளையும் விசேஷமாக ஆராதிப்பதற்கு என்ன முகாந்தரம்? இந்த விஷயங்களை நன்கு ஆராய்ந்துபார்க்கவேண்டும். யாதொரு நுட்பமான ஆராய்ச்சியில்லாமல் சாமான்யமாகவும் ஸ்தூலபரம்பரையாகவும் ஏற்பட்ட வழக்கங்கள்தான் அதற்கு காரணமென்று சொன்னால் அது பொருந்தாது. ஏனெனில், மற்றவழக்கங்கள்போல இல்லாமல், இந்தவழக்கங்கள் நம்முடைய நாட்டிலுள்ள ஆரியர்கள் அனைவோர்களும் வைதிகமுறையாக அநுஷ்டிப்பதாகவும், அந்த அநுஷ்டானமானது எல்லா ஜாதியார்களும் தங்கள் தங்கள் மதங்களின்படி பக்திசிரத்தையுடன் அநுசரிக்கப்படுவதாகவும் இருப்பதால், அவ்வழக்கங்களுக்கு ரகஸ்யமாக ஏதோ ஒரு தாத்பரியம் இருக்கவேண்டியதென்று நாம் ஊகிக்கவேண்டியிருக்கின்றது. அந்தத்தாத்பர்யம் என்னவென்று நாம் ஆராய்வோமாக.

முதலில் மகாலயபக்ஷத்தின் முக்கிய தாத்பர்யத்தைப்பற்றி நாம் விசாரிப்போம்.

1. மகாலயபக்ஷம்.

இந்தப்பதத்திற்கு எல்லாம் ஒருஇடத்தில் லயமாகும் காலமென்றுபொருள்படுகின்றது. இந்தக்காலத்தை, கந்யாகதே ஸவிதரி ஆஷாட்யாதிபஞ்சமாபரபக்ஷ, மென்று சொல்லப்படுகிறது. இதற்குப்பொருள், கன்னியாராசியில் சூரியன் இருக்கும்பொழுது Winter Solstice என்று நவீனர்கள் வானசாஸ்திரத்திற் பிரிந்துச் சொல்லுகிறகாலமாகிய ஆஷாட்யமாசமுதல், அதாவது தக்ஷிணாயனம் பிறந்ததுமுதல், ஐந்தாவது பக்ஷமும் அபரபக்ஷமுமான பதினைந்து

தினங்களெனப் பொருள் கொள்ளவேண்டும். இன்னொருமுறையாக, ஸௌராஸ்வீநயக்ருஷ்ணபக்ஷ, மகாலயமென்றுசொல்லப்படுகிறது. இதற்குஸௌரமானப்படி, அஸ்வனீய மாசத்தில்வருங்கிருஷ்ணபக்ஷமென்று பொருள். அஸ்வனீயமாசமென்றால் வரஷருதுவில் சூரியன் அஸ்வனிநக்ஷத்திரத்திற்குச் சமீபமாக வருகிறகாலமென்று பொருள். அதாவது ஆவணி புரட்டாசி இந்த இரண்டுமாசங்களில் அஸ்வநிநக்ஷத்திர ராசியாகிய மேஷத்திற்கு அதிகசமீபமான கன்யாராசியில் சூரியன் இருக்கிறகாலமாகிய புரட்டாசிமாசத்தில்வரும் கிருஷ்ணபக்ஷமென்று அர்த்தமாகின்றது. எந்தமுறை பார்த்தாலும் கன்னியில் சூரியன் இருக்கும்பொழுது வருகின்ற கிருஷ்ணபக்ஷமே மகாலயபக்ஷமென்று அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. பின்னாலே சொல்லப்படும் காரணத்தினால் நவராத்திரியும் அவ்விதமாகவே புரட்டாசிமாசத்தில் வருகின்ற சுக்கிலபக்ஷத்தில் அனுஷ்டிக்கப்படவேண்டியதென்று வெளியாகும். ஆகவே கன்னியாராசியில் சூரியன் இருக்கும்பொழுது வருகின்ற கிருஷ்ணபக்ஷத்தைப் பிதுர்க்களினுடைய ஆராதனைக்குரிய விசேஷகாலமென்றும், சுக்கிலபக்ஷத்தை தேவதைகளின் ஆராதனைக்குரிய விசேஷகாலமென்றும், கைக்கொள்ளபட்டிருக்கின்றது. அத்யாத்மமாகிய தத்வமுறைப்படிக்கும், அதிதைவதமாகிய உபாஸனைமுறைப்படிக்கும், அதிபூதமாகிய ககோளசாஸ்திரப்படிக்கும், மகாலயபக்ஷத்தின் ஸூக்ஷ்மார்த்தத்தை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

1. அத்யாத்மமுறையில் கன்னியாராசியில் சூரியன் பிரவேசித்தல் என்பதற்குப் பொருளென்ன? பின்வரும் விவரணத்தை நன்கு ஆராயவேண்டும்.

மேஷமுதல் மீனமீறாக பன்னிரண்டு ராசிகளும் முறையே நிஷ்கிரியமானப்ரம்மம், கிரியைக்கு ஆஸ்பதமான பிரணவம், பிரகிருதி புருஷன் என்னும் இருமை, பிரபஞ்சம், சமஷ்டிஜீவன், ஜீவசக்தி, இச்சை, கிரியை, ஞானம், அபக்ஷயமாகியஜரை, மரணம், மோக்ஷமென, பன்னிரண்டு தத்வங்களைக்குறிக்கின்றன. அஃது எப்படியென்றால்,

(1) மேஷம் - மிஷ் என்னும் தாதுவிலிருந்து உண்டானது. அதற்கு உதாசினமாய் பார்த்தல் என்று பொருள். அப்படியே

உன்மேஷமென்றால் ஒரு விஷயத்தை நோக்கிப் பார்ப்பது. அது சிருஷ்டியைக் குறிக்கின்றது. நிமேஷமென்றால் அந்தப்பார்வையை மூடிக்கொள்வது. அதுபிரளயத்தைக் குறிக்கின்றது. உந்மேஷநிமிஷோத்பந்நவிபந்நபுவநாவலி: என்று "மூலகாரணம் ஸ்துதிக்கப்படுகிறது" இதன்பொருள்:—விழிப்பதினால்புவனசிர்ஷ்டியையும், கண்மூடுவதினால் புவனலயத்தையும், செய்கின்ற" என்பதாகும். சிர்ஷ்டிக் கிரமத்தில் முதலில்" "ததைக்ஷத= அது பார்த்தது என்பது வேதவசனம். மேஷமென்றால் அவ்விரண்டு மில்லாமல் உதாசினமாகவும் ஒரு விஷயத்தையும் குறிக்காமலும் பார்ப்பது, சர்வசாக்ஷி, யென்று அர்த்தம். பாகவதத்தில் பிரமத்திற்கு அவிஷக்த திருஷ்டி என்று சொல்லப்படுகிறது.

(2) விருஷபம் = விருஷ் = வழிதல், அசைதல், என்னும் பொருளுடைய தாது. கிரியைக்கு மூலமாகிய அசைவைக் குறிக்கின்றது. (Vibration.) அது பிரணவம். அதினுடைய ரூபம் சங்கேதமாக 0, உபநிஷத்தில்பிரணவத்திற்கு விரஷபமென்று பிரதிநாமம் கூறப்படுகின்றது.

(3) மிதுனம்=மித்=இரண்டு ஒன்றாகச் சேர்தல் அல்லது பிணைதல் என்னும் பொருளுள்ள தாது. மூலகாரணமானது சிருஷ்டிநிமித்தமாக இரண்டாகி, ஒன்று ஊடாகவும் மற்றொன்று பாவாகவும் அமைந்து சேருவது. இதின் ரூபம் +, வேதாந்த கிரந்தங்களில் இவ்விரண்டும் ஓதம் என்றும் புரோதம் என்றும் அழைக்கப்படும். ஊடுநூலும் பாவுநூலும் ஒன்றுக்கொன்று குறுக்காகச் சேர்ந்து வஸ்திரமாவதுபோல, மூலகாரணமே ஓதம் புரோதம் என இரண்டாகிப் பிணைந்து பிரபஞ்சமாகின்றது. இவ்விரண்டையும் பிரகிருதி என்றும் புருஷனென்றும் சொல்லப்படுகிறது. இதையேசக்தி சிவமெனவும், அர்த்தநாரீசுவரரெனவும், ஓர் சமயவாதிகள் கொண்டாடுவதும், தவிர இலக்குமியை மார்பில் தரித்துக்கொண்டிருக்கும் நாராயணனென மற்றொரு சமயவாதிகள் உபாஸனாவிதியில் கொண்டாடுகிறார்கள். மூலகாரணத்தை + அடையாளத்தினால் Roman Catholics கிறிஸ்துவர்கள் குறித்து ஆராதிப்பதையும் காண்க நவீன

சாஸ்திரமுறையில், (Modern science) positive, negative என இரண்டாகவும், Centirfugal, Centripetal forces என இரண்டாகவும் கைக்கொண்டிருக்கிறார்கள்.

(4) கற்கடகம், கடபயாதி சங்கியையில் சங்கேதமாக, க, என்றால் ஒன்று என்பது பொருள். மறுபடியும் க, என்றால் ஒன்று ட, என்றால் ஒன்று. மறுபடியும் க, என்றால் ஒன்று. ஆக கற்கடகம் என்றால் நாலு என்று அர்த்தமாகிறது. இரண்டாகிய ஊடும் பாவும் சேர்ந்து நாலுபக்கமுள்ள வஸ்திரமாவதுபோல, பிரகிருதி புருஷர்களே பிரபஞ்சமாக அமைந்தார்கள். இதின் ரூபம் ▯. இது தான் விராட் என்று சொல்லப்படும். ஸமஷ்டியாக, பிரபஞ்சத்திற்கும் வியஷ்டியாக, ஒவ்வொருபொருளுக்கும், நான்கு அவயவங்கள் உள்ளன. அவை நீளம், (Length,) அகலம், (Breadth,) உயரம், (Height,) ஆழம், (Depth) என நான்காகும்.

(5) ஸிம்ஹம் = இது ஸி + ஹம் என்னும் இரண்டு தாதுக்களால் அமைந்தது. ஸி, என்பதற்கு கட்டுவது அல்லது பந்தப்படுத்துவது என்பது பொருள். ஹம் என்பதற்கு ஆத்மா என்று பொருள். ஆகவே ஸிம்ஹம் என்பதற்கு பந்தப்பட்டஆத்மா என்று பொருளாகும். அது சமஷ்டி ஜீவனாகிய ஹிரண்ய கர்ப்பனைகுறிக்கின்றது.

(6) கன்னி - கன் என்னும் தாதுவுக்கு பிரியப்படுதல் அல்லது ஆசைப்படுதல் என்பது பொருள். அது இச்சைக்குக் காரணமும் ஹிரண்யகர்ப்பனுடைய பராசக்தியுமாகிய மாயையைக் குறிக்கின்றது.

(7) துலாம் - கடபயாதிசங்கியைப்படி து=6, ல=3, துலாம் என்பது=36; அது காமத்திலிருந்து உற்பத்தியாகும் முப்பத்தாறு தத்துவங்களைக் குறிக்கின்றது. அத்தத்துவங்களாவன.

அவஸ்தை 5. { ஜாக்கிரம்
சொப்னம்
சுஷுப்தி
துரியம்
துரியாதீதம்

கரணம் 4.	புத்தி சித்தம் மனம் அஹங்காரம்
மனோவிகாரம் 6	காமம் குரோதம் லோபம் மோஹம் மதம் மார்ச்சர்யம்
மனோவிருத்திகள் 6	ஆஸ்யம் ரதி அரதி சோகம் பயம் குத்ஸா (இகழ்ச்சி)
ஞானேந்திரியம் 5	காது தொக்கு கண் நா மூக்கு
தன்மாத்திரைகள் 5	சப்தம் ஸ்பரிசம் ரூபம் ரசம் கந்தம்
கர்மேந்திரியம் 5	கை கால் வாக்கு உற்பத்திபண்ணும் கருவி மலத்தையொழிக்கும் கருவி

ஆகதத்வங்கள் 36.

இவைகள் சுத்தமாகவாவது மலினமாகவாவது இருக்கலாம். அப்படிப்பேதிப்பது பூர்வகர்மசம்ஸ்காரத்தினால் அமைவதாம். அதில்

ஒன்று ஏறினல் மற்ருென்று இறங்கும். அதினுல் தராசுக்கோலின் தட்டுகளுக்கு உவமானமாகக்கருதி துலாமென்று பேர்கொடுக்கப்பட்டிருக்கிறது.

(8) விருச்சிகம்=விருச்=வெட்டுதல், துன்பப்படுத்தல், புண்படுத்தல் என்னும் பொருளுள்ளதாது. கிரியையானது எப்போதும் துன்பத்தையே கொடுக்கக்கூடியது. அதினுல் யாதொரு பிரயோஜனமுமில்லை. யாதொரு பயனையும் அடையாமல்பிறருக்குத்துன்பத்தைமட்டும் விளைவிக்கும் காரணத்தைப்பற்றி கிரியையானது விருச்சிகத்திற்கு உவமையுள்ளது.

(9) யநுஸ் - கடபயாதி சங்கியைப்படி ய=9, நு=0 யநுஸ் என்ருல் ஒன்பது என்பது பொருள். அது பிர்ம்மஞானத்திற்கு இன்றியமையாத சாதனங்களை குறிக்கின்றது.

1. நித்தியாநித்தியவிவேகம்.
2. இகத்திலும் பரலோகத்திலும் பலனைநாடாமை.
3. சமம்
4. தமம்
5. உபரதி
6. திதிட்சை
7. சிரத்தை
8. சமாதானம்
9. மோட்சஇச்சை.

இவைகளைப்பெறுவதுதான் நரஜன்மத்திற்குஉத்தமப்பிரயோஜனம். (Maximum conquest of humanity.)

(10) மகரம் - கடபயாதிசங்கியைப்படி, ம=5. அது ஐந்தாவது அவஸ்தையாகிய மரணம். "கரம்" என்பதற்கு செய்யும் தன்மையுடையது என்றுபொருள். மகரம்=பிராரப்தம் ஒழிவதற்கு பூர்வவிருத்தியாகிய அபட்சயம் அதாவது ஜரை.

(11) கும்பம் - கு-உ- வியப்புச்சொல் (Interjection)ஊ- தோன்றி இல்லாமல் மறைவது. (Illusion, error)

299

கும்பம் - நான் என்னும் அத்தியாசத்திற்கு அதிஷ்டானமாயிருந்த தேகமானது கேவலம் மண்(dust)என்னும் வியப்பு அதாவது மண்ணையே பிரதானமாக உடைய பவுதிகமாகிய இந்தசரீரமானது ஆத்மசைதந்யத்தை மறைத்து, அதனையே நாம் இதுவரை ஆத்மாவாக பாராட்டிவந்தோமே என்னும் வியப்பு. மேலும் கும்பமென்னும் நாமமானது மரணமடைந்த சரீரத்தின் எலும்புகளை சஞ்சயனகாலத்தில் சேர்த்துவைக்கப்படும் பாத்திரத்திற்கு விசேஷ நாமமாக வைக்கப்பட்டிருப்பதையுங்காண்க. ஆகவே "கும்ப" மானது கடைசி சரீரபதனமாகிய பிராரப்தத்தின் ஒழிவு. இந்த ஒழிவுதான் மோக்ஷத்திற்கு நியதபூர்வவிருத்தியான காரணம். தாவதேவ சிரம்யாவந்நவிமோக்ஷ்யே, எனபிராரப்த்தம்ஒழிவதுதான்தாமதம், அது ஒழிந்தவுடன் மோக்ஷமென, உபநிஷத்தில்கூறப்படும் வசனத்தை இங்கு ஆராயவேண்டும்.

(12) "மீனம்" - "மீ" என்னும் தாதுவிலிருந்தாகிய சொல். அந்த தாதுவுக்கு "மறைதல்" "ஒன்றுக்குள் லயமாகுதல்" என்று பொருள். (மீநாதி - it disappears or merges). இது ஓர்சரீரத்தை அபிமானித்து பரிச்சின்னமாக வியவகரிக்கப்பட்ட ஆத்மசைதந்யமானது அகண்டத்தில் மறைதல் அல்லது லயப்படுதல்என்று பொருள்படுகின்றது. அப்படி மோக்ஷத்தை அடைந்த ஆத்மாவும் கர்மபந்தத்திற்கு உள்ளாகாமல், தனக்குப் பிரியமிருந்தால் ஸ்வயஇச்சையாய் லோகோபகாரமாக ஆவிர்ப்பவித்து கர்த்திருத்துவத்தை வகிக்கவும், அதற்கு ஸ்வாதந்திரியம் உண்டு, என்னும் தாத்பரியத்தை விளக்கி,

ஸம்கஜூாஷேவதஉதவ்ருஷேத:என்றும்,
ஊதவணவவா நந்யாயிவதி: என்றும்,

ருத்திரங்கள் கூறுகின்றபிரகாரம் மோக்ஷத்தை அடைந்த ஆத்மாவுக்கு உவமையாக மீனையும், அகண்ட பிரம்மத்திற்கு உவமையாக ஜலத்தையும், பிரம்மத்தில் ஆத்மாலயமாகிமறையவும் அல்லது ஆவிர்ப்பவிக்கவும் ஸ்வாதந்தரியம் இருப்பதற்கு உவமையாக மீனானது ஜலத்தில் மறைவதையும், பிரியமிருந்தால் ஜலத்தின் மேலாகத்தோன்றுவதையும், சொல்லப்பட்டிருக்கின்றன,

இந்த முறையாக மேஷமுதல் மீனமீறுகவரும் பனிரெண்டு ராசிகளையும், பிரம்ம சைதன்யமுதல் பரிச்சின்னமாகி, பின்னர் விடுதலையாய் மோக்ஷத்தை யடைகின்ற ஆத்மசைதன்யம் வரையில் பொருள்கொண்டு ஆராய்தல்தான் பனிரெண்டு ராசிகளுக்கும் அத்தியாத்மமான பொருள் ஆகும். அப்படித் தியானிப்பது "[illegible]" என்னும் வசனப்படி தத்துவ ஞானத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணமாகும்.

II. இனி அதிதைவத முறையைப்பற்றி விசாரிப்போமாக. மேஷம் முதல் கடகம்வரையில் ஆதிகாரணம்முதல் பிரபஞ்ச சிருஷ்டிவரைக்கும் உள்ள பரம்பராகாரணங்களைப் பற்றிய விவரமாகையால், அவைகள் அதிதைவதமாகிய உபாஸனமுறைக்கு ஸம்பந்தப்பட்டவைகளல்ல. உபாஸனமுறைக்கு ஸகுணபிர்மமாகிய ஹிரண்ணிய கர்ப்பன்முதல் தான் ஆராய்ந்து பார்க்கவேண்டியது. அந்த ஹிரண்ணிய கர்ப்பன் அவருடைய பராசக்தியாகிய மாயையுடைய சம்பந்தத்தின்பேரில்தான், இச்சை, கிரியை, ஞானம் என்கிற மூன்று சக்திகளையும் வகித்து புவன சிருஷ்டியையும், அவைகள் ஒழியுங் காலத்தில் புவனலயத்தையும் செய்கிறான். அதுபற்றி சிருட்டிகாலத்தை அவன் விழித்து முயலும் காலமென்றும், லயகாலத்தை அவன் தூங்கும் காலமென்றும் சொல்லுவது புராணமுறையாகும். அவனிடமிருக்கிற சமஷ்டி சக்திதான் வியஷ்டியாகப் பிரிந்து சில பாகங்கள் தேவர்களிடத்திலும், சில பாகங்கள் இந்தப் புவனத்திலுள்ளசகலவிதமான சேதன அசேதன வஸ்துக்களிடத்திலும், சில பாகங்கள் அதோலோக வாசிகளான பூத, பிரேத பிசாசர்களாகிய நரகர்களிடத்திலும், அவரவர்களுடைய விருத்தி தாரதம்யப்படி விளங்குகின்றன. தேவர்களுடைய சக்திகளெல்லாம் உலகத்திற்கு க்ஷேமத்தை உண்டுபண்ணுவனவாகவும், நரகர்களுடைய சக்திகள் இம்சையைப் பண்ணுவனவாகவும், இவ்வுலகத்திலுள்ள சேதன அசேதன வஸ்துக்களுடைய சக்திகளெல்லாம்அவர்களுடைய, பிறப்பு இருப்பு இறப்பு இவைகளுக்கு அனுகூலமாகவும், சேதன வஸ்துக்களுடைய போகத்திற்கும் கருமத்திற்கும் ஸாதனமாகவும், அமைந்திருக்கின்றன. ஆதலால் சமஸ்த தேவதைகளுடைய தனித்தனி

சக்திகளும் மாயா ஸமேதனான ஹிரண்ணியகர்ப்பனிடம் இருந்து உற்பத்தியாகின்றன. அதன்பின்னசக்திகளெல்லாம் பூர்ணசக்தியில் லயமாகி திரும்பினபின்னர், அந்த சக்திகளுக்கு அதிக வல்லமை உண்டாகின்றது. எப்படியென்றால் ஹிரண்ணியகர்ப்பனுக்கு மாயையிருப்பதுபோல அந்த மாயையின் ஸ்தானத்தில் மனிதனுக்கு அவித்தை யிருக்கிறது. ஜாக்கிரத் அவஸ்தையில் பல விருத்திகளில் மனிதனுடைய தேகபலம், மனோபலம், ஒருவாறு குன்றுவதையும் விருத்திகள் அமர்ந்து சுஷுப்த்தியில் அவித்தையின்கண் லயமாகி பின்னர் ஜாக்கிரத் அவஸ்தைக்குத் திரும்பினபிறகு, தேகபலமும் மனோபலமும் முன்னிருந்தவாறு களங்கமற்று நிறைவதையும் உதாரணமாகக் காண்கலாம். அந்த ஸகுண பிரம்மமாகிய ஹிரண்ணியகர்ப்பன் சமஷ்டி சக்தியின் சொரூபமாகிய மாயையுடன் கலந்திருக்கும் நிலைமையில் எல்லா உபாஸனைகளுக்கும் உத்கிருஷ்டமான விஷயமாகிறான். தகரவித்தையும், சாண்டல்பவித்தையும், வைஸ்வானரவித்தையும், உபகோஸலவித்தையும், உபாஸனைகிரமத்தில்அந்தஸகுணபிரம்மமாகிய ஹிரண்ணியகர்ப்பனையே விஷயமாகக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு வருஷத்திற்கும் ஒருதடவை எல்லா தெய்வங்களிடத்திலும் விளங்குகின்ற பின்ன சக்திகள் அவைகளுக்கு ஆதாரமான ஸமஷ்டி சக்தியில் லயமாகி அந்த பின்ன சக்திகளுக்கு எற்பட்ட குறைவுகள் நிவர்த்தியாகி அந்த பின்னசக்திகள் ஒவ்வொன்றும் பூரணவிகாசத்தைபடைந்து உபாஸகரர்களுக்கு அநுக்கிரகம்செய்யும் தன்மையைப் பெறுகின்றன. இவ்விதமாக பின்ன சக்திகளெல்லாம் ஸமஷ்டி சக்தியில் லயமாகும்பொழுது அந்த ஸமஷ்டிசக்தியை உபாஸனைசெய்தால், அந்த ஸமஷ்டி சக்தியும் அதில் அந்தர்கதமாயிருக்கும். பின்ன சக்திகளும் ஏககாலத்தில் பூர்ண பிரசன்னமாகி உபாஸர்களுடைய தாபத்திரயங்களை நிவர்த்திசெய்கின்றார்கள். அந்த உபாஸனைதான் மகாலய த்திலும் நவராத்திரி காலத்திலும் செய்யப்படும் பூஜைகள் முதலியனவாகும். இதுதான் அதிதைவதமுறை.

III. இனி அதிபௌதிகமான முறையாவது.

நிர்குண பர்பிர்மத்தை பரிச்சின்னமாகவும் சகுணமாகவும் உபாஸனை நிமித்தமாகநோக்கும்பொழுது, சகுணபிர்ம்மத்தை சூர்யனை

கவும், நம்முடைய ஹிருதயத்திலுள்ள நம்முடைய ஆத்மாவாகவும், கருதி உபாஸிக்கின்றோம். நாம் மார்பில் கையைவைத்துக்கொண்டு "ஜஸௌ" என்றுசொல்லி ஆத்மாவைச்சுட்டியும், சூர்யமண்டலத்தைப்பார்த்து "ஆதித்ய:" என்றுசொல்லி சூரியனைச்சுட்டியும், இவ்விரண்டும் பிர்ம்மமே என்னும் தாத்பர்யத்தை விளக்கி தியான புரஸ்ஸரமாக "பிர்ம்ம" என்றுசொல்லி அதாவது "அஸாவாதித்யோ ப்ரஹ்ம" என்று நாம் ஜபிப்பதைக்காண்க. அதிதெய்வத முறையில் சொல்லப்பட்ட ஸகுணபிர்ம்மத்தையே அதிபௌதிக முறையில் சூர்யனைக்கொள்ளப்பட்டு இருக்கிறது. அந்த சூர்யன் ஸிம்மத்துக்கு வரும்பொழுது ஸ்வக்ஷேத்திரத்தை அடைவதாக சொல்லப்படுகிறது. சூரியனுக்குமேஷம் உச்சக்ஷேத்திரமென்றும், தனுசு மித்திரக்ஷேத்திரமென்றும், சொல்லப்படுகின்றன. மேஷ ஸிம்ம தனுசுக்கு ஒருதிரிகோணம் என்று பெயர். ஸிம்மத்தில் அகங்காரமாகிய பந்தத்தையடைந்து, தனுசில் ஞானஸ்வரூபனாகி, மேஷமாகிய பரபிர்ம்மத்தில் உச்சபதவியான பிர்ம்மஸாயுஜ்யத்தை ஹிரண்ணியகர்ப்பன் அடைகிறான் என்னும் அர்த்தத்தை அது விளக்குகிறது. அந்த சூரியன் கன்னியில் பிரவேசிக்கும் காலமாகிய புரட்டாசிமாதமானது புவனத்திலுள்ள ஸகலசக்திகளும் விகாசத்தை அடைகின்றகாலம். அதாவது புரட்டாசிமாதத்தில் சூரியகிரணங்களின் பிரயோஜனமும் பூமியிலுள்ள பலவித (potentialities) பௌதிகசக்திகளும் ஸம்பந்தப்படுவதினால், ஸகலசராசரங்களும் விருத்தியடைய ஆரம்பிக்கின்றன. அப்படியே ஸ்ரீபாகவதத்தில் அக்காலத்தை "ததஃப்ராவ்ருதத்வ்யாவ்ருத்தவர்ஷாஸமுத்பவ" என்று சொல்லப்படுகிறது. "எல்லாசராசரங்களுக்கும் உத்பத்திகாலமாகிய வர்ஷருது ஆரம்பித்தது" என்று இதற்குப் பொருளாகும்.

(இன்னும்வரும்)

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

303

சநாதனதர்மம் என்றால் என்ன.

சநாதனதர்மமென்பதற்கு பழைமையாகிய தர்ம்மம் என்றும், எக்காலத்தும் கைவிடாது அநுஷ்டிக்க வேண்டிய தர்ம்மங்களென்றும், வடநூல் வல்லார் பொருள் கூறுவர். இதையே சுருதியிலும் தர்மஞ்சர என்றும் உபநிஷத்வாக்கியம் வற்புறுத்துகின்றது. தர்மத்தின் மகிமையை தெய்வப்புலமைத்திருவள்ளுவரும்" அறத்தினூங் காக்கமுமில்லையதனை, மறத்தலினூங்கில்லைகேடு" என்றும் பொய்யா மொழியால் நன்குவிளக்கியிருக்கின்றார். பின்னும் அவர் கூறிய தமிழ்வேதமாகிய முப்பானூலிடத்து ஆத்மரக்ஷார்த்தமாக திருவாய்மலர்ந்துள்ள அறன்வலியுறுத்தல் என்னும் அதிகாரத்துள்ள திருக்குறள் வெண்பாக்களாகிய திருப்பாசுரங்களை, உற்று நோக்குவார்க்கே அறத்தின் தன்மை அறிவு உள்ளவாறு புலப்படும். சிறந்த அறம் யாதெனில் சுருதியில் "அகிம்ஸா பிரதமோ தர்மம்" என்றிருக்கிறது. எவ்விதத்திலும், அன்னியர்களுக்கு தீமைபுரியாதிருத்தலே, முதன்மையாகிய தர்ம்மம் என்பது இதன்பொருள். இத்தன்மைவாய்ந்த தர்ம்ம சூக்ஷமங்களை உள்ளவாறுணர்ந்து முறைதவறாது அநுஷ்டித்தற்காகவே, சுருதிஸ்மிருதி முதலிய சாஸ்திரங்களை முற்றுணர்வுடைய முதல்வனாலும், அம்முதல்வனை நோக்கி புரியும் தவத்தால் மனந்தூயராகிய முனிவர்களாலும், இயற்றப்பட்டிருக்கின்றன. அந்த சுருதிஸ்மிருதிகளில் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களாகிய நான்கு சுத்தஜாதிகளும், இவர்களின் கலப்பால் அநுலோம, பிரதிலோம அந்தராள, விராத்தியாதி சங்கர ஜாதிகளும், முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டு அந்தந்த ஜாதியார்கள் தங்கள் தங்கள் நிலைமைக்கேற்ப, சுருதிஸ்மிருதி முதலிய நூல்களில் சொல்லப்பட்டவண்ணம் அறத்தைச்செய்யவேண்டுமென்றும், தங்கள் தங்கள் நிலைமைக்கு மேலாகவேனும் கீழாகவேனும், அறத்தைச்செய்வோர், நரகத்தை யடைவார்களென்றும், வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. பின்னும், அறத்தை அநுஷ்டிக்கப் பிரம்மசரிய, கிருஹஸ்த, வானப்பிரஸ்த சந்நியாசம் என்கின்ற ஆசிரமங்கள் நான்கையும் சுருதிஸ்மிருதிகளிலெடுத்துச்சொல்லி, அந்தந்த ஆசிரமத்துக்குரிய தர்மங்களையும் விஸ்தாரமாய் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தந்த வர்ணாச்ரமங்களுக்குரியவர்கள், அந்தந்த வர்ண

ச்ரமங்களையும் விடாது, அனுஷ்டித்துப் பொதுவான தர்மங்களையும் மேற்கொண்டொழுகலையே சநாதன தர்மமென்று சொல்லப்படும். சுருதிகளையே ஆதாரமாகக்கொண்ட சநாதன தர்மம் இப்பொழுது நடைபெறுகின்ற எல்லாச் சமய தர்மங்களினும் புராதனமானது. அதன் தத்துவஞானம் ஒப்பற்ற மகிமையுள்ளது. அதன் பரிசுத்தமான தர்மநீதி மற்றைய எச்சமய நீதிக்கும் கீழ்ப்பட்டதன்று. அதன்சம்ஸ்காரங்களும் தர்மானுஷ்டானங்களும், காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவண்ணம் பொருந்தி யமையக்கூடியவைகள். ஆகவே மனிதனின் ஒவ்வொரு நற்கோரிக்கைக்கும் அதில் புகலிடமுண்டு. அதன் குறைவில்லா நிறைவுக்கு மற்றைய எச்சமயத்தினின்றும் கூட்டவேண்டுவது யாதொன்றுமின்றாம். அதைப்படிக்கப்படிக்க, அறிவுக்குத் தெளிவும், மனத்திற்குஉபசாந்தியும், உண்டாகின்றன. அதைச் சிறிதேனும் கற்கும் மனிதன், தான் உள்ளவரையில், சந்தோஷ அபிவிருத்திக்கும், ஆபத்துக்காலத்தில் மனச்சமாதானத்துக்கும், சாதனத்தைச் சம்பாதித்துக்கொள்ளுகிறான். தர்மம் என்ற பதத்தின் தாத்பரியம் என்னவென்றால், தரிக்கிறதினால் தர்மமென்று சொல்லுகிறார்கள். அதாவது தர்மமானது பிரஜைகளை நிலைநிறுத்தித் தாங்குகின்றது என்பதாம். இந்த சநாதனதர்மத்திற்கு முதனூல்கள் இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்று சொல்லப்படுகின்ற நான்கு வேதங்களான சுருதிகளும், மனு, யாக்ஞவல்கியர், சங்கர், லிகிதர், பராசரர் முதலியோர் செய்த ஸ்மிருதிகளுமாம். இவைகள் முறையே நான்கு யுகங்களிலும் பிரமாணங்களாகக்கொண்டு அனுஷ்டிக்கப்பட்டவைகள். உலகத்திலான்மாக்கள் பூர்வஜன்மங்களில் செய்த கர்மங்களுக்கீடாக ஈசுவரானுக்கிரகத்தால், பல மதத்திலும் சற்றேறக்குறைய சமத்வமாகவே தர்மங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதை அமிர்தபிந்து உபநிஷத்தில் பத்தொன்பதாவது மந்திரத்தில் சொல்லியிருப்பதையே, தமிழில் மொழிபெயர்த்து நாலடியாரில்,

> "ஆவே றுருவின ஆயினும் ஆபயந்த
> பால்வே றுருவின வல்லாவாம்—பால்போல்
> ஒருதன்மைத் தாகு மறநெறி ஆபோல்
> உருவு பலகொள லீங்கு."

என்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. பசு பலநிறமுடையனவாயிருத்தல்போல் உலகத்தில் மதங்கள் பல வெளிப்படையான அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தபோதிலும், அப்பசுவின் பால் ஒரேதன்மையா யிருத்தல்போல, மதங்களின் கண்ணுள்ள தர்மங்களும் ஒரேதன்மையாமென்பது முன் சொல்லப்பட்ட உபநிஷத் நாலடியார் முதலியவைகளின் தாத்பரியம். கலியில் யாவராலுங்கொண்டாடக்கூடியது பராசரஸ்மிருதி. அதில் ஒன்றாகிய வஸ்துவையறிந்து அடைய ஏற்படுத்தியசோபானங்கள் பன்னிரண்டாக வகுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை விவரிக்கில் மிகவும் பெருகுமாதலின் சுருக்கிச் சொல்லுகின்றேன்.

(1) பிரம்மசாரியதர்மம். (2) கிருஹஸ்ததர்மம். (3) ஸ்நாதகதர்மம். (4) ஆகாரமும் அதன் சுத்தமும். (5) ஸ்திரிகளின் தர்மம். (6) வானப்ரஸ்தன், சந்நியாசி, இவர்களின் தர்மம் (7) ராஜநீதிதர்மம். (8) நியாயவிவகாரங்களைப்பற்றிய தர்மம். (9) ஸ்ரீபுமான்கள் அனுசரிக்கவேண்டிய சாசுவத தர்மம். (10) நான்குவர்ணத்தார்களும் ஆபத்காலங்களில் அனுஷ்டிக்கவேண்டிய தர்மம். (11) பிராயச்சித்தங்களைச்செய்து பாபங்களினின்று நீங்கிக்கொள்ளும்முறை (12) முன்சொன்ன தர்மங்களை அனுஷ்டித்து ஆத்மலக்ஷணங்களையறிந்து மோக்ஷத்தையடைவது. மேற்குறித்த விஷயங்களடங்கியவைதான் சநாதனதர்மம் இவைகளையனுசரித்தே, நம் சைவசித்தாந்த பரமாசாரியராகிய ஆசிரியர் கமலைஞானப்பிரகாச சுவாமிகள் சைவசநாதன தர்மமென்றநூலை, மணிப்பிரவாள வசனநடையில், சுமார் முன்னூற்றெழுபத்தைந்து வருஷங்களுக்குமுன், இயற்றியிருக்கிறார்கள். அந்நூலை முற்றொருங்குணர்ந்து சொல்லவேண்டுமெனும் பேரவாபெரிதும் அடைந்தவனாகயிருந்தும், அந்நூலில்ஏட்டுப்பிரதியொன்றுதான் கிடைத்துளது. அதில்சிலவிடங்களில் செல்வாக்கின் அமைதியால் பூரணமாயுள்ள பிரதிகிடைக்கும்வரையில் முழுவிஷயமும் சொல்லமுடியவில்லை. இச்சநாதனதர்மத்தை அனுசரித்தே மேற்சொல்லிய கமலைஞானப்பிரகாசர் பரம்பரையிலுள்ளவர்களும், தர்ம்மபுராதினம் பத்தாவது பட்டத்தில் பண்டாரசந்நிதிகளா யிருந்தவர்களுமாகிய ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக

ஸ்வாமிகள் சுமார் 180 வருஷங்களுக்குமுன், பிரம்மசூத்திரத்திற்கு ஏற்பட்ட நீலகண்ட பாஷியத்திற்கு வியாக்கியானஞ் செய்திருக்கிறார்கள். அந்நூலில் சிலபாகம் பார்வைக்கு கிடைத்தனவேயன்றி, முழுமையும் எனக்குக்கிடைக்கவில்லை. அதில் சநாதனதர்மாநுஷ்டான சதாநந்தாம்வஸ்து விவேகமுதலியசதுஷ்டயசாதனமுடைய உள்ள ஆன்மாவுக்கு, ஜிஜ்ஞாசாதிகர்ணத்தால் பிரம்மசுவரூபமாகிய சிவசுவரூபம் விளங்கினவுடன், பிராரப்தத்தையும் தாக்கற்றனுபவித்து மோக்ஷத்தை யடைகிறானென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் விவரணங்களை பிரம்மசூத்திரத்தில், அதாதோ பிரஹ்மஜிஞ்ஞாஸா, என்பதைப்பின்னும்பின்னும்பிரமத்தின்இயலைப்பேணியுணர்கவென்றும், சிவஞானதேசிகர் மொழிபெயர்ப்பாலும், சாஸ்திரயோனித்வாத், என்னும் சூத்திரத்திற்கு முன்னோர்நூலின் முறைவழிகாண்க என்னும் மொழிபெயர்ப்பாலும், அவைகளின் விசேஷஉரைகளாலும், விரிவாய்க்காணலாம். ஆதலின் சநாதன தர்ம்மத்தால்அடையும்பயன் சுத்தமனதை யடைதலாம். இதை அமிர்தபிந்து உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் தாத்பரியம் மனம் சுத்தமனம் அசுத்தமனம் என இருவகைப்படுமென்றும், சுத்தமனம் ஆசையற்றதென்றும், அசுத்தமனம் ஆசையுற்றதென்றும் ஏற்படுகின்றது. அற்றது பற்றெனின் உற்றதுவீடு என்னும் நம்மாழ்வார் திருவாய்மொழியிலும், வேண்டுதல் வேண்டாமையிலானடிசேர்ந்தார்க்கு யாண்டுமிடும்பையில என்னும் தேவர் திருவாக்கும்கூறியிருக்கின்றமையாலும், ஒப்பற்றமோக்ஷத்தை அடைதற்கு சநாதனதர்ம்மங்கள் சோபானக்கிரமங்கள் என்பதை யாவரும் அறிந்து அவ்வழிநடந்து திருவருளையடைய, எனது இருதயகமலவாசியாகிய ஸ்ரீகமல வசந்தியாகராஜபெருமானை சிந்தித்து வந்திக்கின்றேன் என்பதாம்.

டி. யஸ். தியாகராஜ ஞானியார்,

திருவாலூர்.

சேலம்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் வித்வான்

T. S. நடராஜையரவர்கள் மாணாக்கர்.

சே. ரா. திம்மப்பையரா லியற்றப்பட்ட.

நேரிசை ஆசிரியப்பா. (25-அடிகள்.)

படர்தரு சோலைகள் பலவும் பரந்து
அடர்தரு பண்ணைக ளழகிய வாக
விளங்குந் தோற்றத்த வெள்ளொளி விரிக்குந்
தெள்ளிய பைம்பொற் சிகரச் சினகரத்
தலகிலா வாதி யந்தமு மில்லாத்
தலைவி யாகிய வங்கயற் கண்ணியொடு
சோம சுந்தர நாமப் பெம்மான்
வாம மாகவீற் றிருக்கு மதுரையிற்
புவியுறு மானிடர் புகலுதற் கரிதாய்ச்
சவியமை ஞானநல் விளக்கென நலஞ்சேர்
படியினி லுலவும் பத்திரங்க ளெல்லா
மடிமைக ளாகுமா றெழுடிவில் தலைமை
யுற்றது மன்றியு மறிவிலி களுக்கோர்
பீற்றுத லைச்செய்து பற்றற வொழிக்கும்
பான்மைய தாகியும் பாரினிற் பெருஞ்சீர்
ஞானமு மறைதரு வியாசங்க ளோடு
நிலவிய பெருமைப் பீஎ பீயெலெனு
மிலகிய பட்டத் திணையிலி ரங்க
சாமியொடு சற்குண நாரா யணனெனப்
பாமிகப் பயின்றவிச் சீலர்ரத் தலைவராக்
கொண்டு வெளிவரு மெண்டகு கோலத்த
கண்டவர் களிகொளு மொருமதிப் பத்திரம்
புகழுறு மிதன்பெயர் 'பூர்ணசந்தி ரோதயம்'
இகழ்மிக வுடைய வெளியனேன்
றகவுடை யதன்சீர் சாற்றலோ வியப்பே.

308

பத்திரிகைகள் வரவு.

---0---

தமிழன்:—சென்னையில், புதவாரம் தோறும் வெளிப்பட்டுவரும்சிறந்த தமிழ்ப்பத்திரிகை இது. இது பௌத்தமதத்தின் கொள்கைகளை பெரும்பாலும் ஆதரித்தும் சிறுபான்மை பொதுவிஷயங்களைப்பற்றி எழுதியும் நடைபெறுகின்றது. இக்காலத்தின் இயல்பை உத்தேசித்து, பிறர் மதத்தையும் பிறரையும் தூஷியாமலும் துவேஷிக்காமலும் பத்திரிகைகள் நடைபெறுதல் நலம். பிராமணர்களின் தூஷணையும், அவர்கள்பால் துவேஷமும் அனுவசியமாயும் சரித்திரஉண்மையின் ஆராய்ச்சிக்குறைவால் எழுதப்படுதல் வழக்கமாய் இருக்கிறது. பிறர்களை தூஷிக்காமல், பௌத்தமதஸ்தர்களை உயர்வுபடுத்தலும் புகழ்தலும் கூடுமன்றோ. வித்வான்களாலும் புராதனக்கவிகளாலும் ஒப்புக்கொண்டு அனுஷ்டானத்தில் ஏற்பட்டுவருகின்ற மொழிகளுக்கு மாறான ரூபங்களை கற்பித்தல் நலமன்று என்பதையும் கவனிக்கவேண்டும். நன்மை என்பதத்திற்கு நன்மெய் என்றும், பொறுமை என்பதற்கு பொறுமே என்றும் இவைபோன்ற பலமொழிகள் வீணுமாற்றம் பெறுகின்றன.

மாதர் மனோரஞ்சினி:—இது பெண்களுக்குஅறிவைப்புகட்டும் ஒருமாதாந்தத்தமிழ்ப் பத்திரிகை. நல்லவிஷயங்களும் புத்திகற்பிக்கும் கதைகளும் இதில் பிரசுரமாகிவருகின்றன. இது யாருக்கும் வாசிக்கும்படியாக எளியதமிழில் வாசகநடையாக எழுதப்பட்டுவருகின்றது. 12 வருஷங்களாக இப்பத்திரிகை நடைபெற்று வருகின்றமையால் இப்பத்திரிகையின் உபயோகமும், அதற்கு ஜனங்களின் ஆதரவும் நன்கு விளங்குகின்றன.

சர்க்காரில், விவஸாயிகளுக்கு உபயோகமாக, கிருஷித்தொழிலில் பலவிதமான போதனைகள் அங்கிலபாஷையிலும் தேசபாஷைகளான தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகளிலும் அச்சுப்போட்டு பிரவித்தஞ்செய்து வரப்படுகின்றன: இது பெரிய உபகாரமே. 1. அகன்று உழுவதைவிட ஆழஉழுதல், களைகளின்வேர்கள் அறுப்பட்டுப்போவதுடன், நிலத்தின்சத்து பயிர்களுக்கு அதிகமாக பயன்படுமென்றும். 2. நெற்பயிர் நடுகையில் ஒற்றை நாற்றுநடுதல் லாபகரமாக இருக்கிறதென்றும். 3. தென்னை, பனைமரங்களின் நோவுகளை நீக்கும்முறைகள் இன்னவையென்றும் 4. கால்நடைகளின் உரத்தை, முக்கியமாக அவைகளின் சிறுநீரை எருவாக சேகரிக்கும்முறை இன்னவையென்றும் இவைபோன்ற விஷயங்கள் பிரசித்தப்படுத்தப்பெற்று வருகின்றன. இப்பத்திரிகைகள் இனமாக கொடுக்கப்படுகின்றன. வேண்டுவோர் விவசாய டிப்டி டைரக்டர் எச். சி. சாம்ஸன் என்பாருக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

புத்தக வரவு.

திருக்குற்றலத்தல புராணம்:—மேலகரகம் திரிகூடராஜப்பக்கவிராயரவர்கள் செய்தது. தென்னாட்டிற் சிறந்த திருக்குற்றாலமென்னுஞ் சிவஸ்தலத்தின் மகிமைகளை நன்கு வெளியிடுவது. தமிழிற்சிறந்து தலைமைபெற்ற புராணங்களில் இதுவுமொன்று. இனிய சொற்களும, அரியபொருளும், விழுமியஓசையும், நவரசாலங்காரங்களும், கற்பனையும் மிகக்கொண்டது. சைவசமயத்தினர்க்குரிய விதிவிலக்குக்கள் இதனுட்பல காணலாம். இத்தகைய அரிய புராணத்தை மதுரைத் தமிழ்ச்சங்கம் நூற்பரிசோதகரும் சிறந்த தமிழ்வித்துவானுமாகிய மகா-ா-ா-ஸ்ரீ மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் பலபிரதிகளை வைத்து ஆராய்ந்து சுத்தப்பிரதியாக்கி அரும்பதவுரையும் எழுதி அழகாக அச்சிட்டிருக்கிறார்கள். நல்லபயினுள்ளது. விலை ரூபா 1—8—0-தான்.

குலோத்துங்க சோழன்கோவை:—இப்பழையநூலையியற்றிய புலவர் பெயர் தெரியவில்லையாயினும், ஒவ்வொருகவிகளும்அந்நூலின் துறைகளுக்கேற்பச்சிறந்த பொருள் வளமுடையதாகியிருத்தலால், சிறந்தபுலவரொருவரால் பாடப்பட்டதென்பது விளங்குகின்றது. இதுவரை அச்சிடப்படாதது. இதையும் மேற்குறித்த மகா-ா-ா-ஸ்ரீ அருணாசலக்கவிராயரவர்களே நன்கு பரிசோதித்து அச்சிட்டிருக்கின்றார்கள். துறைகளின் பொருளையும், கவிகளின் அரும்பதவுரையையும் எழுதியிருப்பதுடன் கோவையின் விவரங்களையெல்லாம் எடுத்து விளக்கியுள்ளமையால் படிப்பவர்க்குப் பெரும்பயன் தரத்தக்கதேயென்பதில் ஐயமில்லை. இதன் விலை ரூ 0-12-0 நம்தமிழ்நாட்டுவாசிகள் இவைகளை வாசித்துவருவார்களாயின் கவிராயரவர்கள் இந்நூல்களைப்போலவே யின்னும் பன்னூல்களை ஆராய்ந்து வெளியிடுதற்கு ஏதுவாகும். இவைகள் மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

இரட்டைப்புலவர் சரிதம்:—இது "கலம்பகத்திற்கு இரட்டையர்' என, பிரவித்தம்பெற்ற இரண்டு தமிழ்புலவர்களின் சரிதம். இவர்கள் உறவின் முறைமையில் அத்தைமகனும் அம்மான் மகனுமாம். இவர்கள் பெயர்கள் முறையே **இளஞ்சூரியர், முதுசூரியர்** என்பனவாம். ஒருவர் முடமாகவும் ஒருவர் குருடாகவும் இருந்தனர். இவர்களுக்குள்ள ஒற்றுமையால், குருடராய் உள்ளவர் மேல் முடமாயுள்ளவர் ஏறிக்கொண்டு உலாவினர். சாங்கியசாஸ்த்திரல், **பிரகிருதிபுருஷன்** இரண்டு தத்துவங்களுள், புருஷன் முடம், பிரகிருதி குருடு, குருடான பிரகிருதியின்மேல் முடமான புருஷன் நடைபெறுகின்றமைபோலவும் இவ்விருதத்துவங்களுள், ஒன்றின்றி மற்றது நடைபெறாததுபோல, இவ்விரட்டையர்கள், சாங்கிய சாஸ்திரத்தின் தத்துங்களே இவ்விருமூர்த்திகளாகவே அமைந்தனவெ

னச்சொல்லலாம். இவர்கள் இற்றைக்கு 460- வருஷங்களுக்கு மூன்னர் இருந்திருக்கலாமெனத் தோன்றுகிறது. இவர்கள் காலத்திய புலவர்கள், பாரதம்பாடிய வில்லிபுத்தூர் ஆழ்வார். திருப்புகழ்பாடிய அருணகிரிநாதர் முதலியவர்களாம். இப்புத்தகம், சிறிதெனினும் மிகவும் நன்ருய் யாவரும் வாசிக்கக்கூடிய எளிய தமிழ்நடையில், எழுதிஉள்ளது. இப்புத்தகத்தை இயற்றியவர், தொகுத்தவர் கோவை சாரதாவிலாச செந்தமிழ்ச்சங்கக்காரியதரிசி ஸ்ரீமான் சி. கு. நாராயணஸ்வாமி முதலியார் என்பார். இப்புத்தகம் மதுரைச் செந்தமிழ் பத்திரிகையின் பல பகுதிகளில் முன்வெளிவந்தது. இதில், அப்புலவர்கள் பாடிய தனிப்பாடல்கள் ஸமயோஜிதமாக எடுத்து ஆளப்பட்டிருக்கின்றன. மதுரைத் தமிழ்ச் சங்கம் பவர்பிரஸ்ஸில் நேர்த்தியாக அச்சியற்றப்பெற்றிருக்கிறது. இதன் விலை 3. அணுதான். இத்தகைய வசனரூபமானப் புத்தகங்கள் நம்தமிழ் நாட்டில் அதிகமாக ஏற்பட்டால் மிகப்பிரயோஜனகரமாக இருக்கும். தேசம் நலம்பெறவேண்டுமானுல், ஜனங்கள் பேசும்பாஷை நலம்பெறவேண்டும். பாஷை நலம்பெறவேண்டுமானுல், அப்பாஷையில் பிறந்தனன்மக்கள் அறிவு அகன்றவும் ஆழ்ந்தவுமான பூர்வீகர்கள் சரித்தங்களை எளிய நடையில் எழுதிப்பரவச்செய்ய வேண்டும். உயர்நலம் அமைந்த பூர்வீகர்களின் சரிதத்தின்மூலம் நம்தேசத்தின்மேல் அபிமானமும், அதனுல், ஒப்புரவும், அதனுல், பொதுநயம்பயக்கும் கைங்கரியம் செய்வதில் ஊக்கமும் ஜனங்களுக்குள் உண்டாகும். இப்புத்தகம் அம்முறையில் நலம் பயக்கத்தக்கது.

பத்திராதிபர்.

நன்மொழி.

39. நல்லவைஎவைக்ண்டாலும் தன்மயப்படுத்து. தன்மயப்படுத்த உன்மனம் மேன்மையை நாடும். மேன்மையை நாட கீழ்மை கீழாம், உயர்நலம் பெறுவாய்.

40. எப்போதும் கடவுளிடம் மனத்தை வை. அதனுல் உன் அறிவு விசாலிக்கும், உன் வார்த்தையும் உன்செய்கையும் முன்னில்லாத ஒரு அழகைப்பெறும்.

41. ஞானமுறையில் இறைவனை நோக்கி ஒரு அடி வைத்தால் அவர் உன்னை நோக்கி 100 மைல் நடப்பார். இதில் பெருமை என்பது தியாகத்தின் அளவாம்.

சமாசாரம்.

மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களின் பிரஹ்மஞான கிளைச்சங்கங்களின் இரண்டாவது மஹாசபை.

சிவகங்கையில் 1910௵ நவம்பர்௴ 19, 20௳களில் நடத்தப்பட்டது. ஸ்ரீமான். எப். டி. புரூக்ஸ் அவர்கள் அக்கிராஸனம் வகித்தார்கள்.

விஷயக்கிரமங்கள்.

1. 1910௵ நவம்பர்௴ 10௳ சனிக்கிழமை சிவகங்கைகிளைச்சபை அக்கிராசனாதிபதி அவர்களின் உபசாரணை. 2. ஸபை அக்கிராசனாதிபதி அவர்களின் ஆரம்ப உபந்நியாசம். 3. மகா-ள-ள-ஸ்ரீ ப. நாராயணய்யர் அவர்களின் "சத்திரங்களும் அவைகளின் சீர்திருத்தங்களும்" என்ற உபந்நியாசம். 4. மகா-ள-ள-ஸ்ரீ வி. வெங்குசாமி அய்யர் அவர்களின் "எண்ணங்களின் சக்தி" என்ற உபந்நியாசம். 5. மகா-ள-ள-ஸ்ரீ ராமஸ்வாமி பிள்ளை அவர்கள் "ஆன்மாவை"ப் பற்றிய உபந்நியாசம். 6. ஸ்ரீமாந். எப். டி. புரூகஸ் என்பவர்கள் "பகவத்கீதை மனிதசமுகத்திற்கு உயர்தர சமய சாஸ்திரம்" என்ற உபந்நியாசம். கடைசியில் பிரஹ்மஸ்ரீ நாராயண அயயர் அவர்கள் இந்தியபுத்திரர்களைப் பற்றி விஸ்தாரமாக உபந்நியாசம் செய்தார். அன்று இரவு $8\frac{1}{2}$ மணிக்கு மகா-ள-ள-ஸ்ரீ ப. நாராயண அய்யர் அவர்கள் சூக்ஷ்ம சரீரங்கள் முதலியவைகளைப்பற்றி புகைப்படங்கள் மூலம் உபந்நியாசம்.

1910௵ நவம்பர்௴ 20௳ ஞாயிற்றுக்கிழமை காலை $9\frac{1}{4}$மணிமுதல் 11மணிவரை:—1. மகா-ள-ள-ஸ்ரீ வி. ராமச்சந்திர அய்யர்அவர்களின் "தமிழ் நாட்டிற்கு வேண்டும் படிப்புமுறையை"ப் பற்றிய உபந்நியாசம். 2. மகா-ள-ள-ஸ்ரீ வி. ராமச்சந்திர நாயக்கர் அவர்கள் "எண்ணங்களின் சக்தியும் நரகமும்" என்பதைப்பற்றிய உபந்நியாசம் ஸ்ரீமான் ராமசாமிபிள்ளை அவர்களால் வாசிக்கப்பட்டது. 3. பெரியகுளம் மகா-ள-ள-ஸ்ரீ சுந்தரராஜ அய்யர் அவர்கள் "பிரஹ்மஞானமும், பிரஹ்மஞான சபையும்" என்ற உபந்நியாசம்.

கவுண்டு டால்ஸ்டாய்:—என்பார் ருஷியதேசத்தின் பிரபு. அவர் ஞானி, ரிஷி என்று சொல்லலாம். ஜனசமுகத்தில், சத்தியம், ஈசுவர பக்தி, ஜீவகாருண்யம் முதலிய நற்குணங்கள் பரவவேண்டுமென, பலபுத்தகங்கள், துண்டுபத்திரிகைகள் எழுதி எழுதி பிரசித்தம் செய்துவந்தார். அவர் கிறீஸ்து மதத்தில் பிறந்தவராயினும், உலகத்தில் உள்ள ஏனைய மதங்களிலும், மதஸ்தாபனாசாரியர்களிடமும் எவ்வித துவேஷபுத்தியும் கொள்ளாதவர். அவர் அபிப்பிராயத்தில், ஒவ்வொரு மதத்தின்கண்ணும் முக்கியமான விஷயங்கள் அமுக்கியமான விஷயங்கள் என இரண்டுவித விஷயங்கள் இருக்கின்றன. ஒருவன் தன்மதத்தின் முக்கியமான விஷயங்களை அநுசரித்து நடக்கவேண்டுமானால், அன்னிய மதங்களின் ஆராய்ச்சி மிக

வும் அவசியமாம். அப்போது தான் தன் மதத்தின் முக்கியமான தர்மங்கள் இன்னவை என அறிவான். எல்லா மதங்களிலும், முக்கியமான உண்மைகளில், பெரும்பாலும் வித்தியாசங்கள் இராவாம். அவ்வாறாய்ச்சியினால் தன்மதம் உயர்வு, பிறர்மதம் தாழ்வு என்ற செருக்குக்குறையும். குறையவே, ஜனசமூகத்தில் நேர்மை உண்டாம், போராட்டம் தொலையும். இவ்விதம் அவர் எழுதுகின்றார். அம்மஹான் சென்ற சிலநாட்களாக தாம் ஏகாந்தமாக இருக்கவேண்டுமெனக் கருதி குடும்பத்தைவிட்டு தேடுபவருக்கும் தெரியாமல் தனித்து இருந்து வந்தார். "இனிது இனிது ஏகாந்தம் இனிது." பின்பு சென்றமாசத்தில்சமாதிகொண்டார். பரலோகமடைந்தார்.

பகீரதி நதியில், வைத்தியசாலைப்படகு. வங்காளத்தில், ஜீவகாருண்யமுள்ள ஒரு ஆங்கிலர், ஒரு படகு அமர்த்தி அதில் வியாதிகளுக்குத்தக்க ஔஷதங்களை சேகரித்துவைத்து நதியோரத்தில் உள்ள கிராமவாசிகளுக்கு, தகுந்த வைத்தியரைக்கொண்டு, ஒரு ஆண்டாய் மருந்து அளித்து வருகின்றார். அவர் பெயர், **காப்தன் மக்வோரத்.** தாமும் தம்முடன் சில உதவி வைத்தியர்களை கூடவைத்துக்கொண்டு இத்தகைய வைத்திய உதவிபுரிகின்றார். சர்க்காருக்குத் தெரிவிக்க அவர்கள் இதற்கு வேண்டிய திரவிய சகாயம் செய்கின்றார்கள். இன்ன இன்ன கிராமங்களுக்கு இன்ன இன்ன தினம் வைத்தியப்படகு வருமென்று, கிராமவாசிகளுக்கு முன்னமே அறிவிக்கப்பட்டு வருகின்றது. அந்த கிராமத்தின் இறங்கு துறையில், வைத்தியப்படகு வருகிறகாலத்தில் ஏராளமான ஜனங்கள் வைத்தியம் செய்துகொள்வதற்காகக் கூடுகின்றார்கள். இத்தன்மையான தர்மமே பெரிய உபகாரமாகும். இவ்வித வைத்தியமுறை மற்றைய நதிதீரங்களிலும் ஏற்படுமாகில், அநேகர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். சர்க்காரில் சமீபத்தில் அவ்விதம் ஏற்படுத்துவார்கள் எனத் தோன்றுகிறது (U. India & N. States.)

ஆமை ஓட்டின் வியாபாரம்:—ஆமை ஓடானது, தலைச்சீப்பு, தலைக்கொண்டையை தாங்கும் ஊசி, பணப்பை, கத்திகளின்பிடி இவைபோன்ற சில்லறை சாமான்கள் செய்வதற்கு உபயோகப்படுகின்றது. ஆமை ஓடானது ஏராளமாய் பலதேசங்களினின்று முக்கியமாக கோலன் என்னும் தேசத்தினின்று இங்கிலாண்டு தேசத்திற்கு இறக்குமதி செய்யப்படுகின்றது. சென்ற 1903௵த்தில் 16000 பவுண்டு கனமுள்ள ஆமைஓடு இறக்குமதிசெய்யப்பட்டது. இந்த ஓட்டை எடுக்கும் விதம் மஹாபாதகமாக இருக்கிறது. இந்த ஓடு ஆமையின் முதுகில் உள்ளது. அந்த ஜீவனைபிடித்து, ஓட்டின்மேல் நெருப்புதணலை சற்று நேரம் வைக்க ஓடுகிளம்பும், பின்பு அந்த ஜந்துவினின்று பலாத்காரமாக பிடுங்கப்படுகின்றது. பின்பு அந்த ஜந்து கொஞ்சகாலம் தன்னைக்காக்கும் மேலோடில்லாமல் வருந்துகின்றது. பின்பு மெலிய ஓடு ஒன்று அதற்கு உண்டாகிறது, அது போதுமானபடி ஆதரவாக இல்லாமல், அந்த ஜந்து வியாதிகொண்டு மரணமடைகிறது. ஆதலால், ஆமையோட்டினால் செய்யப்பெறும் சாமான்களை உபயோகிக்கின்றவர்கள் இந்த ஜந்துவின் வதையின் பாபத்தில் பங்காளிகளாகிறார்கள்.

(ஹிந்து பத்திரிகை) பத்திராதிபர்.

ADVERTISEMENT.

இந்து சாஸ்திராபிமானி.

இத்தலைப்பெயரிட்ட புஸ்தகமொன்று அடியிற் கையொப்பமிட்டவரால் இனிய செந்தமிழ் நடையில் நவீனமாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இதில் இந்துமத கோட்பாடுகளையும் பொது நன்மைகளையும் தழுவிப்பேசுகிற அநேக உபந்நியாசங்களும் திருவாங்கூரை அரசாட்சிசெய்த பூர்வீக அரசர்களுடைய சரித்திரங்களும் இவர்களிடம் மந்திரிவேலையில் அமர்ந்திருந்த தேர்ந்த புத்திசாலிகளாகிய மிஸ்டர் தளவாய் ராமய்யர், ஸர். டி. மாதவராவ், ஆனரபில் ராமய்யங்கார் முதலிய மேதாவிகளின் சரித்திரங்களும் அடங்கி இருக்கின்றன. குறித்த புஸ்தகம் விலை உயர்ந்த நல்ல கிளேஸ் கடிதத்தில் முத்துப்போன்ற அட்சரங்களாக பொறுக்கியெடுத்து 8பேஜுள்ள 16 பாரத்தில் 128 பக்கம்வரை அச்சிடப்பட்டிருக்கின்றது. வேண்டுவோர் தங்கள் பெயர், ஊர், போஸ்டு முதலிய பூராவிலாசங்களையும் எனக்குத் தெளிவாக எழுதும்பக்ஷத்தில் கல்லிடைக்கும்மி ஸகிதம் போஸ்டேஜ் உள்பட 6 அணா விலைக்கு வி. பி. மூலம் அனுப்புவேன்.

ஆரிய ஜன போதினி.

இந்நூதன தமிழ்புஸ்தகத்தில் இந்தியாவின் முற்கால தற்கால நிலைமைகளையும், அக்காலங்களிலுள்ள அரசர்களின் ஆட்சி முறைகளும், கைத்தொழில் விஷயங்களும், பிராசீன மகரிஷிகளால் விதிக்கப்பட்டிருக்கின்ற தர்ம சூட்சுமங்களும், அந்நி பெஸாண்டு அம்மையவர்களின் அருமையான உபந்நியாசங்களும், தாதாபாய் நௌரோஜி இந்தியாவுக்கு உழைத்து வருகின்ற சிறந்த பெரும் முயற்சிகளும், அவரது சரித்திரமும், ஸ்ரீ கிர்ஷ்ண மூர்த்தியின் ஸத்கிருத்ய மஹிமைகளும் விவேகானந்த ஸ்வாமிகளால் உபதேசிக்கப்பட்ட வேதாந்தத்தின் கருத்துக்களும், ஸநாதனதர்மம் நிலைத்திருக்கும்பொருட்டு கர்னல், ஆல்காட் துரையவர்களால் செய்யப்பட்டிருக்கின்ற காரியங்களும், பாஞ்சாலி யென்னும் பதிவிரதா சிரோன்மணியை மானபங்கம் செய்யமுயன்ற துச்சாதனன் அவமானமடைந்ததும், ராஜஸூயயாகத்தில் தர்மபுத்திரருக்கும் சிசுபாலனுக்கும் நேரிட்ட வாக்குவாதங்களும், பஞ்சாப், வங்காளம், டில்லி, பாட்னா, முதலியவைகளை யொத்தபிறவிடங்களில் நவீன வியவஸாய சாஸ்திரத்தை யனுசரித்து செய்யப்படுகின்ற வியவஸாய முறைகளும், இதுபோல் இன்னும் அநேக அற்புதவிஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. குறித்தபுஸ்தகம் விலை யுயர்ந்தகிளேஸ் பேபரில் பாரம் 8 பேஜ் ஸைஸில் 120 பக்கங்கள்வரை நல்ல செந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இது ஸ்ரீராம, கிருஷ்ண மூர்த்திகளின் படங்கள் ஸகிதம் பிறமத தூஷணையின்றி பலமேல்விலாசங்களுடன் ஸகல மதஸ்தர்களுக்கும் பொதுவாக இயற்றப்பட்டிருக்கின்றது. இதற்கு வி. பி. சார்ச்சுடன் விலை அணா 10. ஸிலோன் முதலிய வெளிநாடுகளுக்கு ஒரு அணா ஜாஸ்தியாகச் சார்ச்சு செய்யப்படும். வேண்டுவோர் இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட்டு எனக்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

வா. முத்துகிருஷ்ண அய்யர்.

இந்து சாஸ்திராபிமானி,

கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா.

314

ADVERTISEMENT.

எல்லாப்பண்டிதரும் புகழும்
இரண்டு அற்புதமான தமிழ் நாவல்கள் எவை?

மரகதவல்லி— { விலை-அணா 8. மூன்றாம் பதிப்பு.

பஞ்சரத்தினம்— விலை-அணா 8.

அபிப்பிராயம் தந்தவர்களிற் சிலர்.

1. தண்டலம் பாலசுந்தர முதலியார் சென்னை யுனிவர்சிட்டி தலைமைப் பரீக்ஷைக் கர்த்தர்.
2. தி. செல்வகேசவராய முதலியார், M. A.
3. இராயபகதூர் ஆ. தனக்கோடி முதலியார், F. M. U., M. R. A. S.
4. S. அனவரதவிநாயகம் பிள்ளை, M. A., L. T.
5. பண்டித நடேச சாஸ்திரியார், B. A., M. F. L. S
6. தி. இராமகிருஷ்ணபிள்ளையவர்கள், B A., F. M U. F. R. H. S
7. தி. சதாசிவஐயரவர்கள் B. A., M. L., F T. S.
8. வி. கனகசபைப் பிள்ளை அவர்கள், B. A., B. L., போஸ்டல் சுபர்இன்டெண்டு
9. ஹானரபில் பி. கேசவப் பிள்ளை அவர்கள்.
10. எ. சுப்பராயலு ரெட்டியாரவர்கள், B. A., B L., கூடலூர்.
11. இராயபகதூர் M. ஆறுமுகம் பிள்ளைஅவர்கள், டிப்டிகலெக்டர்.
12. ப. நாராயண ஐயரவர்கள் B. A., B. L., F, T. S மதுரை.

"மரகதவல்லி தமிழுக்குஆபரணம்போன்றது. ஒவ்வொருவீட்டிலும் எல்லா ஆணும் பெண்ணும் பலமுறைபடிக்கவேண்டிய நூல்."

M சிங்காரவேலு முதலியார், B. A, F. T. S.
Ag. இனிஸ்பெக்டர் ஆவ் ஸ்கூல்.

பி. சி. கோவிந்தசாமி ராஜா,
பெனுகோண்டா, அனந்தப்பூர்ஜில்லா.
Penukonda, Ananthapur District.